MASTER NEGATIVE NUMBER

6133.74

குமரன்

ஆரம் 5, முத்து 23

January 19, 1928

Record no. 313

Kumaraṉ

Āram 5, muttu 23

January 19, 1928

Record no. 313

Registered No. M. 1823
Tel: KUMARAN, KARAIKUDI.

உ
சிவமயம்.

தனிப்பிரதி
விலை அணா ஒன்றரை.

குமரன்

"என்கடன் பணிசெய்து கிடப்பதே."

(வாரப் பதிப்பு.)

வியாழன் தோறும் வெளியிடப் பெறுவது.

" கதரே உயிர். "

" கருணையே தெய்வம். "

ஆரம் ரு.
முத்து உரு.

காரைக்குடி. பிரபவ-ஹு தை - மீ ௬ - உ (19—1—28)

கசு
பக்கங்கள்.

தாயனைய ஆய்.

திருவாளர் ரா. பி. சேதுப்பிள்ளை பி. ஏ., பி. எல்.

வேளாண்மை யென்னும் பழுதற்ற பணியா லுயர்ந்த விழுமிய குலத்தில், வரையாது பொருள் வழங்கும் வள்ளலாய் விளங்கிய பெரு மக்களில் பொதியின் மலைத் தலைவனாய ஆய் என்னும் அண்ணலும் ஒருவனாவான். தேமாவும், தீம்பலாவும், கோங்கும், வேங்கையும் ஓங்கி வளர்ந்த அக்குன்றின் குளிர் சோலைகளில், வரிக் குயில்கள் இசைபாட, வண்ண மயில்கள் வனப்பாய் நடித்தன. மஞ்சு தவழ்ந்த அம்மலையில் வீசிய மந்தமாருதம் மல்லிகை மணம் கமழ்ந்தது. குன்றக் குறவரது மக்கள் செழுந்தேனுண்டு குரவையாடி மகிழ்ந்தார்கள்.

" குறியிறைக் குரம்பைக் குறவர் மாக்கள்
வாங்கமைப் பழுனிய தேறல் மகிழ்ந்து
வேங்கை முன்றில் குரவை அயரும்
தீஞ்சுளைப் பலவின் மாமலைக் கிழவன் "

என்று திருந்து மொழிப் புலவராய மோசியார் இவ் வள்ளலைப் புகழ்ந்து போற்றினர். இத்தகைய குன்றாத வளமார்ந்த குன்றில், யானைக் கன்றுகள் குழாம் குழாமாய்க் குலாவித் திரிந்து குதித்து விளையாடும். இவ்வாறு ஆயிரக் கணக்காய் அலைந்து திரிந்த யானைகளைக் கண்ட அருந் தமிழ்க் கவிஞர், அம் மலையில் ஒரு சூலுற்ற யானை பத்துக் கன்றீனுமோ என்று ஐயுறுவாராயினர்.

" விளங்கு மணிக் கொடும் பூண் ஆய்! நின் [நாட்டு
இளம் பிடி ஒருசூல் பத்தீனும்மோ "

என்று புலவர் வியந்து வினவினர்.

* * *

இத்தகைய வளமுடைய வளநாட்டின்தலைவனாய் விளங்கிய ஆய் இரவலர்க்கு இன்முகம் கொண்டு ஈயும் வள்ளலாய் விளங்கினன். பாடிவந்த பாவலரது பசிப்பிணி மாற்றி அவரது பெருமைக்கேற்ற வேழப்பரிசும் விரும்பி யளித்தான். பாலைச் சோறின்றி வருந்திய பாவலர் யானைப் பரிசுபெற்று மீண்டார்கள். ஆயிரம் பொன் விலைபெறும் யானைகளை அகமகிழ்ந்து பரிசளித்த அண்ணலது பெருமையை அறிந்தோர், வறுமையால் வருந்தியோரை அவன்பால் உவந் தனுப்பினர்கள். " ஆய் ஈன்ற தாயினும் இனியன் " என்னும் இன்னுரை தமிழ்நாடெங்கும் பரவிற்று. இத்தகைய தாயன்பு வாய்ந்த ஆயினிடம் பரிசு பெற்றுயர்ந்த புலவர் ஒருவர், வறுமை வாய்ப்பட்ட ஓர் விறலியை அப் பெருந்தகையிடம் அனுப்பும் முறை அழகாய் அமைந்துள்ளது.

" மெல்லியல் விறலி, நீ நல்லிசை செவியில்
கேட்பின் அல்லது, காண்பறி யலையே,
காண்டல் வேண்டினை யாயின், மாண்டநின்
விரை வளர் கூந்தல் வரைவளி யுளரக்
கலவ மஞ்ஞையில் காண்வர வியலி
மாரி யன்ன வண்மைத்
தேர் [illegible] ஆயைக் காணிய சென்மே "

என்று விறலியை ஆற்றுப்படுத்தும் முறை அறிஞர் கருத்தைக் கவர்வதாகும். ' மெல்லியல் வாய்ந்த இசை மாதே! ஆய் என்னும் வள்ளலது ஆசற்ற புகழை இதுகாறும் செவியாற் கேட்டறிந்தாயல்லது, அவன் வடிவைக் கண்டறிந்தாயல்லையே; வரையாது கொடுக்கும் அவ்வள்ளலைக் காண விரும்புவாயாயின் தென்மலைக் குளிர்ந்த தென்றல் நின் கூந்தலை யசைக்க, அப்பெருமான் வாழும் மலையை நோக்கிச் சென்று, மாரியைக் கண்ட மயில் போல் மனம் களிப்பாயாக ' என்று நயம்படக் கூறுகின்றார். தென்மலையினின் றெழுந்து வரும் தென்றல், ஆயைக் காணவரும், விருந்தினரது களைப்பையாற்றி இன்புறுத்து மென்றும், அத்தென்றலின் இனிமையில் திளைத்து, மலையின்மேற் சென்றோர், கார்மேகத்தைக் கண்ட களிமயில்போல, ஆயைக் கண்டு அகம் களிப்பர் என்னும் நயமாகக் கூறிய மொழிகளில், அவ்வள்ளலின் வண்மையும், அவன் மலையில் வீசும் இளங்காற்றின் இனிமையும் இலங்கக் காணலாம். இவ்வாறு விரும்பி வந்தடைந்த அறிஞர்க்கும் வறிஞர்க்கும் வேழக் கொடை கொடுத்த வள்ளலின் பெருமையை,

" நின்னும் நின்மலையும் பாடி வருநர்க்கு
இன்முகம் கரவாது உவந்து நீயளித்த,
அண்ணல் யானை எண்ணில் கொங்கர்
குடகட லோட்டிய ஞான்றைத்
தலைப் பெயர்த்திட்ட வேலினும் பலவே "

என்று பரிசுபெற்ற பாவலர் போற்றிப் புகழ்ந்தார். பாடி வந்த பரிசிலர்க்கு, அணியணியாக யானையைக் கன்றுடன்கொடுத்த ஆயின் பெருமை,

" மன்றுபடு பரிசிலர்க் காணின், கன்றொடு
கறையடி யானை இரியல் போக்கும்
மலைகெழு நாடன் மாவேள் ஆய் "

என்னும் அடிகளாலும் இனிதறியப்படும். அருஞ்சுவை யுணவைத் தாமருந்திப் பிறர்க்கொன்றீயாப் பெற்றி வாய்ந்த பெருஞ்செல்வர் நகரினும், இரப்போர்க்கீந்து வறுமை எய்திய ஆயின் மலையே சிறந்ததென்று, அறிஞர் ஆயைப் புகழ்ந்து ஏனைச் செல்வரைப் பழித்துரைத்தார்கள்.

" சுவைக் கினிதாகிய குய்யுடை அடிசில்
பிறர்க்கீ வின்றித் தம்வயி றருத்தி
உரைசால் ஓங்கு புகழ் ஒரீஇய
முரசுகெழு செல்வர் நகர் போலாது "

எப்பொழுதும் வருந்தி வந்தவர் அரும்பசி களைந்து அவர் திருந்து முகம் கண்டு தீவைக்கும் ஆய் மலை சிறந்ததென்பதில் ஐயமொன்றுண்டோ?

* * *

இவ்வாறு இரவலர்க்கில்லையென்னாது ஈந்த இவ்வள்ளலின் இனியமனப்பான்மை அறிந்து போற்றுதற் கரியதாகும். பெரும்பாலும் இவ்வுலக மக்கள் இம்மை மறுமைப் பயன்களைக் கருதியே அறஞ் செய்கின்றார்கள். இருமைப் பயன்கருதாது, தாலுண்ட நீரைத் தலையாலே தரும் தன்மை வாய்ந்த தக்கோர்க்கு பயனை எதிர் நோக்கி ஈதல், பண்டமாற்றே யன்றி அறமன்றென்பது சொல்லாமையே அமையும். இவ்வாறன்றி, நிலையற்ற இவ்வுலகில், என்றும் அழியாத புகழுடம்பு பெற விரும்பிச் சில பெரியார் அறம் செய்வார்கள்.

" மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே
துன்னரும் சிறப்பின் உயர்ந்த செல்வர்
இன்மையின் இரப்போர்க்கு ஈயாமையின்
தொன்மை மாக்களில் தொடர்பறி யலரே "

என்று புகழுடம்பு பெறும் பெரியாரது பெற்றியைப் புறநானூறு போற்றி யுரைக்கின்றது. இத்தகைய புகழை விரும்புவோர் மக்களிற் பெரும்பாலாராவர். இன்னும் அறநூல் விதித்தவாறு, சாலைகள் வகுத்தும் சோலைகள் வளர்த்தும் அறச்சாலைகள் அமைத்தும் இம்மையில் அறமியற்றி மறுமையில் இன்பப் பேறெய்தும் நோக்கமும் அறஞ் செய்வாரது மனத்தில் அமைந்ததாகும். இத்தன்மை வாய்ந்த அறங்கள் மறுமைப்பயன் கருதி ஆற்றப்படுவனவாம். ஆகவே இவ்வுலகில நல்லறம் செய்யும் நன்மக்கள் பலர், இம்மைப் பயனாய புகழ் கருதியேனும், மறுமைப் பயனாய இன்பம் கருதியேனும் அறமியற்றுகின்றார்கள் என்பது நன்கறியப்படுகின்றது. இவ்வாறு பயன் கருதி யாற்றப்படும் அறங்களைத் தலைசிறந்த அறங்களாகத் தக்கோர் கருதமாட்டார்கள். பயன் கருதிச் செய்யும் அறத்தினும் பயன் கருதாது ஆற்றப்படும் அறமே சாலவும் சிறந்ததென்று அறநூல் கூறுகின்றது. இத்தகைய பயன் கருதாப் பண்பு ஆயிடம் அமைந்திருந்த தன்மை,

" இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வாணிகன் ஆய் அல்லன்,
பிறரும் சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கை வண்மையே "

என்னும் அழகிய கவியால் இனிதறியப்படும். இம்மையிற் செய்த நற்செயல் மறுமைக்குதவுமென்று கருதி, அறத்தை விலை கொடுத்து வாங்கும் வணிகன் ஆய் அல்லன் என்று கவிஞர் கூறும் மொழிகளில் இவ்வள்ளலின் ஏற்றம் இனிது விளங்குகின்றது. பணி செய்தலே தம் கடனாகக் கொண்டு, வீடும் வேண்டா விறலின் விளங்கும் தலையாய ஆன்றோர் தன்மை ஆயிடம் அமைந்திருப்பது ஆராய்ந்தறிவார்க்கு இனிது விளங்கும்.

* * *

இத்தகைய தலையாய தண்ணளி வாய்ந்த வள்ளலை முன்னே நினையாது பின்னே நினைந்த பெரும் பிழையை எண்ணி வருந்தும் புலவரது மொழிகள் ஆயின் பெருமைக்கு அமைந்த சான்றாகும்.

" முன் உள்ளுவோனைப் பின் உள்ளினேனே
ஆழ்கென் உள்ளம் போழ்கென் நாவே,
பாழூர்க் கிணற்றில் தூர்க என் செவியே "

என்று கவிஞர் வருந்தி யுரைத்தார். யாவருக்கு முன்னே நினைக்கத் தக்க வள்ளலைப் பின்னே நினைந்த என் உள்ளம் ஆழ்ந்து போவதாக; அவனையன்றிப் பிறரைப் புகழ்ந்த என் நாவும் பிளப்பதாக; அவன் புகழையன்றிப் பிறர் புகழைக் கேட்ட என் செவிகள் பாழும் கிணறுபோல் தூர்வதாக; என்று கவிஞர் கடுமொழிகளால் தன்னைக் குறை கூறுகின்றார். இத்தகைய தலையாய வள்ளல் மண்ணுலக வாழ்வை நீத்து, விண்ணுல கடைந்தபொழுது தாயை இழந்த கன்று போல் தயங்கிய தமிழ்ப் புலவர் தளர்ந்த பசியால் வருந்தி அயல்நாடு நோக்கி அல்லல் எய்தினர்.

" காலன் என்னும் கண்ணில் உய்ப்ப
மேலோர் உலகம் எய்தினன் எனா
ஒள்ளெரி நைப்ப உடம்பு மாய்ந்தது
புல்லென் கண்ணர் புரவலர்க் காணாது
கல்லென் சுற்றமொடு கையழிந்து புலவர்
வாடிய பசிய ராகிப் பிறர்
நாடுபடு செலவின ராயினர் இனியே "

என்று கீரனார் பாடிய கவியால் அருந்தமிழறிஞரும் சுற்றமும், ஆதரவற்று வருந்திய தன்மை அறியப்படும். இவ்வாறு தமிழ் நாட்டில் தாய்போல் விளங்கிய ஆய், அரனடி பரவும் அன்பனாய் அமைந்து நாகம் நல்கிய நீலவுடையினை நஞ்சுண்ட நாதனுக் களித்து மகிழ்ந்த சீலம்,

" நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆய் "

என்னும் சிறுபாணாற்றுப்படையால் செம்மையாய் விளங்கும். இவ்வாறு இரவலரைப் பேணி இறைவனைப் போற்றிய வள்ளல் என்றும் அழியாத புகழுடம் பெய்தினன்.

இந்தியாவில் பத்திரிகைத் தொழில்.

(சென்றவாரத் தொடர்ச்சி.)

'இந்தியாவில் பத்திரிகைத் தொழில்' எனும் மகுடமிட்டு ஸ்ரீ ராமானந்த சாட்டர்ஜி அவர்கள் இம்மாதத்திய 'மாடர்ன் ரெவியூ' பத்திரிகையில் அரியதோர் கட்டுரை வரைந்துள்ளார். அதன் மொழி பெயர்ப்பு வருமாறு:—

ஸ்திரீகள் ஸாதிக்கக்கூடியது இன்னதென்பதை நாம் தெரிந்துகொள்ளாமலிருந்தாலும் அப்பாவினரின் விஷயமாக முற்கூட்டிய அபிப்பிராயத்திற்கு வந்திருப்பதாலும் நாம் அதிக நஷ்டமடைந்திருக்கிறோம். ஸ்திரீகளுடைய உரிமைகளுக்குப் போதிய நியாயம் வழங்குவதற்கு இது சம்பந்தமான தகவல்களைப் பத்திரிகைத் தொழில் செய்வோர் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். குற்றங்கள், கைது செய்தல், விசாரணை, தீர்ப்புகள், சிக்ஷை, சிறைகள் சிறைச்சாலைச் சீர்திருத்தம் இவை சம்பந்தமான விஷயங்கள் பத்திரிகையில் பெரும் பாகத்தை அடைக்கின்றன. ஆகவே, பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவர்கள் இவை சம்பந்தமான தகவல்களையும் தெரிந்துகொண்டிருக்கவேண்டும்.

பத்திரிகைத் தொழிலிலீடுபட்டிருக்கிறவர்கள் கிராம நகர அபிவிருத்தி திட்டங்கள், நகர வாழ்விலும் கிராமவாழ்விலுமுள்ள குண தோஷங்கள், கிராம நகர சுகாதாரம் முதலிய விஷயங்களைப்பற்றியும் எழுத வேண்டியிருக்கும். ஆகையால் தொத்து வியாதிகள் ஏற்படுவதற்குக் காரணமென்னவென்பதையும், சுகாதார விஷயங்களையும் நகர நிர்மாண விஷயங்களைத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும்.

சமூகம் அபிவிருத்தி யடைவதற்காகத் தொழில்களும் வ்வசாயமும் அவசியம். உற்பத்தி சம்பந்தமான எத்தொழிலிலும் சில அசௌகரியங்கள் ஏற்படாமலிருப்பதில்லை. அவைகளை எவ்விதம் பரிகரிப்பதென்று யோசனை சொல்லப் பத்திரிகைத் தொழிலிலீடுபட்டவர்கள் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். இதற்கு தொழில்களைப் பற்றிய ஞானம் வேண்டும். சுரங்கங்கள், வனங்கள் இவைகளில் ஜனங்களுக்கிருந்து வரும் சுதந்திரங்களைப் பாதுகாப்பதற்காக அவைசம்பந்தமான சட்டங்களையும்தெரிந்துகொண்டிருக்க வேண்டும். பூமி தத்துவ சாஸ்திரத்தில் பரிச்சயம் ஏற்படுத்திக் கொள்ளுவதும் உபயோகமாகவிருக்கும்.

தொழிலாளர் சம்பந்தமான எல்லாப் பிரச்னைகளையும் நாம் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். ஜினீவாவிலுள்ள சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனத்திலிருந்து வெளியிடப்படும் அறிக்கைகள் இந்த விஷயங்களில் பரிச்சயம் ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு அனுகூலயானவைகளாக இருக்கின்றன.

ரயில்வே போக்குவரத்து, ரயில்வே நிர்வாகம், கப்பல்போக்குவரத்து, கடலோரப் போக்குவரத்து, கால்வாய்ப்போக்குவரத்து, ஆகாயப்போக்குவரத்து, தந்திப் போக்குவரத்து, தபால் கட்டண விகிதங்கள், சுங்க வரிகள் முதலியவைகள் விவசாயம், தொழில் துறைகளுடன் நெருங்கிய சம்பந்தமுடையவைகளாக இருக்கின்றன. இந்தப் பிரச்னைகளைப் பைசல் செய்யும் விஷயத்தில் மேனாடுகளிலும், ஜப்பானிலும் விசேஷ அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. முற்போக்கடைந்துள்ள தேசங்களில் இருந்துவரும் நிலைமையை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இவைகளைத் தெரிந்துகொள்ளுவதற்காக வியாபார சம்பந்தமான தகவல்களைத் தெரிந்து கொள்ளுவது அனுகூலமாக இருக்கும்

ராஜீய விஷயங்கள், போக்குவரத்து வசதி விஷயங்கள், தொழில் விஷயங்கள் இவைகளில் முன்னிலும் அதிகமாக ஜனங்கள் இப்பொழுது சிரத்தை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். கூட்டத்தினுடைய மனோ விர்த்திகளையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

இப்பொழுது இருந்துவரும் நிலைமையில் நல்ல காரியங்களை வைத்துக்கொள்ளுவதும், பழைய கால முறைகளில் நல்ல அம்சங்களைப் புதுக்குவதும், ஊழல்களைச் சீர்திருத்துவதும், ஜனங்களுடைய க்ஷேமத்தைப் பெருக்கக்கூடிய காரியங்களைச் சொல்லுவதும் பத்திரிகைத் தொழிலிலீடுபட்டவர்களின் கடமையாகும். ஏதேனும் ஒரு துறையில் அபிவிருத்தி ஏற்படுவது எல்லாத் துறைகளிலும் ஏற்படும் அபிவிருத்தியைப் பொறுத்ததாக இருக்கிறது. ஆகவே, ஏதேனும் ஒரு துறையில் அபிவிருத்தியை ஏற்படுத்த விரும்பும் ஒருவர் எல்லாத்துறைகளிலும் அபிவிருத்தி ஏற்படுவதில் அனுதாபமில்லாதவராக இருக்க முடியாது.

பத்திரிகைத் தொழிலிலீடுபட்டுள்ள ஒவ்வொருவரும் எல்லா விஷயங்களையும் தெரிந்துகொண்டிருக்க முடியாது. சிலர் சில விஷயங்களில் தேர்ச்சியை உண்டுபண்ணிக் கொள்ளவேண்டும்.

பத்திரிகைத் தொழில் செய்வோருக்குப் புத்திகோசரம் இல்லாமலிருக்க வேண்டியதில்லையென்று மேலே சொன்னேன். இதற்கு உதாரணமாக மகாகவி ரவீந்திரநாத் தாகூரைக் குறிப்பிடலாம். ஆனால் சாதாரணமாகப் பத்திரிகைத்தொழில் செய்வோருக்கு அதிகபுத்திகோசரம் வேண்டியதில்லை. மேலே குறிப்பிட்ட யோக்யதைகள் இருந்தால் போதுமானது.

எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்ள வேண்டியது தமது கடமையென்பதைப் பத்திரிகைத் தொழிலிலீடுபட்டவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று மேலே சொன்னேன். ஆனால், சிக்கலான விஷயங்களையும் பொதுஜனங்கள் தெரிந்துகொள்ளக்கூடிய விதமாக அவர் எழுதவேண்டும். அவ்விதம் செய்கையில் உண்மைக்குமாறாக எதையும் சொல்லிவிடக் கூடாது. அவ்விதம் செய்ய அவரால் முடியாவிடில் அவர் தமது கடமையைச் செய்யத்தவறியவராவார். அவர் தற்காலப் பிரச்னைகளைப்பற்றி அபிப்பிராயம் தெரிவிப்பதுடன் மனிதர்கள் ஜீவித்திருப்பது பலன் தரத்தக்கதாக இருக்கும் படியும் செய்யவேண்டும்.

அப்போதைக்கப்போது நடைபெறும் சம்பவங்களை வெளிப்படுத்துவதும் பத்திரிகைத் தொழிலிலீடுபட்டவர்களின்கடமையாகும். இந்த சம்பவங்கள் பலவகைப்பட்டவைகளாக இருக்கும். சில விஷயங்கள் நல்லவைகளாக இருக்கும், சில விஷயங்கள் கெட்டவைகளாக இருக்கும். சில விஷயங்கள் திடுக்கிடச் செய்யக்கூடியவைகளாக இருக்கும்; சில விஷயங்கள் சர்வ சாதாரணமானவைகளாக இருக்கும். நல்லவைகளைவிடக் கெட்டவைகள் அதிகமாக வெளியிடப்படுகின்றன. உலகிற்குப் பல துறைகளில் செய்யப்படும் அனுகூலங்களைக் காட்டிலும் பலவகைப்பட்ட குற்றச் செய்திகளும் கோர்ட்டு நடவடிக்கைகளும் ரஸமானவைகளாக இருக்கின்றன. இவ்விதம் தான் இருக்கக்கூடுமாவென்பது எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் அன்பு காட்டப்பட்ட சிறு விஷயங்களையும் வசீகரமான வழியில் வெளியிடலாம். அந்தசக்தி என்னிடத்தில் இல்லை. 'ஒரு மனிதன் மற்றொரு மனிதனை அடித்தான்; அவன் மீது போலீஸ் கோர்ட்டில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது' என்பதை வெகு ஆவலுடன் நாம் பிரசுரிக்கிறோம். ஆனால் குருடனை ஒரு சிறு பையன் ஜன சந்தடி அதிகமாயுள்ள பாட்டை வழியே வெகு ஜாக்கிரதையாக அழைத்துப் போனான் என்று நாம் சொல்வதில்லை. ஒரு உதாரணமே சொல்லுகிறேன். கண் கெட்டுப்போன ஒரு ஸ்திரீ ரஸ்தா ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு பிச்சை கொடுக்கும்படி கையை நீட்டிக்கொண்டிருந்தாள். அந்த வழியாகச் சென்ற பல தனவந்தவர்கள் அவளிடத்தில் இரக்கம் காட்டவில்லை. ஆனால் அதே வழியாக வந்துகொண்டிருந்த மற்றொரு பிச்சைக்கார ஸ்திரீ அவளிடத்தில் கருணைகாட்டி, தான் பிச்சை வாங்கிக் கொண்டுவந்த சொற்பத்தில் ஒரு பகுதியைக் கொடுத்துவிட்டுப் போனாள். இத்தகைய செய்தியை நாம் பிரசுரிப்பதில்லை.

அல்லது உண்மையில் நடந்த ஒரு சம்பவத்தையே சொல்லுகிறேன். பாங்குரா ஜில்லாவில் கொடிய பஞ்சம் ஏற்பட்டிருந்த காலத்தில் எலும்பும் தோலுமாகி விட்ட ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிறுவனுக்கு அவனுடைய பந்துக்களுக்குத் தெரியாமல் சிறிது ஆகாரம் கிடைத்தது. ஆனால் அதை அவன் சாப்பிட்டுவிடாமல் வீட்டுக்கு எடுத்துப்போய் தனது சகோதர சகோதரிகளுடன் பகிர்ந்து கொண்டான். இத்தகைய மரியாதையும் கருணையும் ததும்பும் சம்பவங்களைப் பிரசுரிப்பது உபயோகமாகவிருக்கும்.

நமது வேலை மிகவும் சங்கடமான வேலை. இந்தியாவில் நமக்குப் பல கஷ்டங்கள் இருந்துவருகின்றன. பல எஜமானர்களை நாம் திருப்தி செய்ய வேண்டியிருக்கிறது. முதலாளிகளுக்குச் சொந்தமான பத்திரிகைகளில் வேலைசெய்துவருகிறவர்கள் முதலில் முதலாளிகளைத் திருப்தி செய்ய வேண்டியிருக்கிறது. எவ்விதம் தான் ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமென்று முதலாளி சொல்லுகிறபடி அவர்கள் செய்யவேண்டிய நிலைமை ஏற்படாமலிருக்கலாம். இருந்தாலும் அவர்கள் என்ன நினைப்பார்களோவென்ற உணர்ச்சி எப்பொழுதும் அவர்களுடைய மனதில் இருந்துகொண்டேயிருக்கும். பலதரப்பட்ட வாசகர்கள் இருக்கிறார்கள்; விளம்பரம் செய்வோர் இருக்கிறார்கள், எல்லாவற்றிலும் முக்கியமாக நம்மை ஆளும் அதிகாரி வர்க்கத்தினர் சம்பந்தப்பட்டமட்டில் ஒரு குறிப்பிடப்பட்ட எல்லையை மீறிப்போய்விடாமலிருக்க வேண்டியிருக்கிறது. இத்தனை எஜமானர்களைத் திருப்தி செய்யவேண்டியிருப்பதால், நமது அந்தராத்மா சொல்லுகிறபடி நடப்பது சாத்தியப்படாமலிருக்கலாம், ஆனால், அவ்விதம் மனச்சாக்ஷியை அலக்ஷியம் செய்வது சரியன்று. நமது வேலை மிகவும் புனிதமான வேலை. எவ்வித அனுகூலத்தை உத்தேசித்தும் நமது மனசாக்ஷியை விட்டுவிடக்கூடாது. பொது ஜனங்களின் போக்கை அனுசரித்துப் போய்விடலாமென்ற தூண்டுதல் ஏற்படலாம். ஆனால், பொதுஜன அபிப்பிராயத்தைச் சரியான வழியில் உருப்படுத்துவது நமது கடமையாக இருக்கிறது. பத்திரிகைத் தொழிலி லீடுபடாதவர்களாயினும் பத்திரிகைகளின் முதலாளிகளாக இருந்துவருகிறவர்கள் தங்களிடம் வேலைசெய்துவருவோருடைய சுதந்தரத்தில் தலையிடக் கூடாது. ஏதேனும் ஒரு கொள்கையை அனுஷ்டிக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினால் அத்தகைய அபிப்பிராய முடையவர்களை வேலைக்கு நியமிக்கவேண்டும்.

நமது வேலையின் போக்கானது எல்லோருக்கும் முந்திக்கொள்ள வேண்டுமென்று நம்மைத் தூண்டக்கூடியதாக இருக்கிறது. இருந்தாலும் அவசரத்திலும் நிதானமாக இருக்கவேண்டும். எல்லாக்காரியங்களையும் ஆர அமர யோசித்தே நமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவேண்டும். ஏதேனும் ஒரு கட்சியில் சேர்ந்திருப்பது நமக்குப் பெரிய இடையூறாக இருக்கிறது. நமது கட்சியில் சேராதவர்கள் செய்த காரியம் தவறானதென்று நாம் முடிவுசெய்துகொண்டு விடுகிறோம்.

பத்திரிகைகளும், பத்திரிகைத் தொழிலும் அபிவிருத்தியடைந்து வருவது தேசத்தில் கல்வித் துறையில் ஏற்பட்டுவரும் அபிவிருத்தியைப் பொறுத்திருக்கிறது. ராஜீயத் துறையில் சுதந்திரமும் பொருளாதார நிலைமையில் செழிப்பும் ஜனங்களுக்கு இருந்தால்தான் பத்திரிகைகள் அபிவிருத்தி அடையக்கூடும். பத்திரிகைத் தொழில் அபிவிருத்தியடைய வேண்டுமானால் மத சமூக விஷயங்களில் சுதந்தரமிருக்கவேண்டும். இந்தியர்களிற் பெரும்பாலோர் எழுத்து வாசனையில்லாதவர்களாக இருக்கிறார்கள். ௧௦௦௦ ஜனங்களுக்கு ௮௨ பேர்கள் தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். தவிரவும், இந்தியாவானது பிறரால் ஆளப்படும் தேசமாக இருப்பதுடன், ராஜத்துவேஷச் சட்டம் முதலியவைகளும் இங்கு இருந்து வருகின்றன. மத சமூக விஷயங்களில் நாம் சுதந்தரமில்லாதவர்களாக இருப்பது மற்றொரு தடைக்கல்லாக இருக்கிறது. எல்லாவற்றிலும் முக்கியமாக, இந்தியாவானது பரம ஏழையான தேசமாக இருக்கிறது. ஆகவே இதர தேசங்களைக் காட்டிலும் நமது தேசத்தில் பத்திரிகைகள் குறைவாகவிருப்பதில் அதிசயமொன்றுமில்லை. அடியிற்கண்ட புள்ளிவிவரங்களிலிருந்து பத்திரிகைத் தொழிலில் இந்தியா எவ்வளவு பின்னடைந்திருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

தேசம்.	ஜனத்தொகை	பத்திரிகைகளின் சங்கியை
இந்தியா	313942,480	3,449
கானடா	8,788,483	1,554
யுனைட்டெட் ஸ்டேட்ஸ்	115,378,000	20,681
ஜப்பான்	6.108,154	4,592
சில்லி	3,963,462	627

ஜனத்தொகையைக் கவனிக்கையில் இந்தியாவில் பிரசுரமாகும் பத்திரிகைகளின் தொகை மிகவும் குறைவாக விருக்கிறது. இருந்தாலும் பத்திரிகைகளின் தொகையில் மட்டில்தான் இந்தியா பின்னடைந்திருக்கிறதென்பதில்லை. சந்தாதார்களின் தொகையும் இந்தியாவில் மிகவும் குறைவாக இருக்கிறது.

இந்தியாவானது ஜனத்தொகையில் பெருத்ததாக இருந்தபோதிலும், பல பாஷைகள் இங்கு வழங்கி வருவதாலும், ஜனங்கள் அறியாமையாகிய அந்தகாரத்தில் மூழ்கிக் கிடப்பதாலும், எந்த தேச பாஷைப் பத்திரிகைக்கும் அதிக சந்தாதார்கள் சேருவது சாத்தியமில்லாமலிருக்கிறது. மற்றெல்லா தேச பாஷைகளிலும் அதிகமாக ஹிந்தியே ௯௬௦-லட்சம் ஜனங்களால் பேசப்பட்டு வருகிறது. ஆனால், ஹிந்தி வழங்கும் பிரதேசங்களில் ஜனங்கள் எழுத்தறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள். மேலும், ஹிந்தி பாஷையைப் பேசுகிறவர்கள் ௬, ௫ மாகாணங்களில் வசித்து வருவதாலும், அவைகள் சேர்ந்தாற்போலில்லாமல் சிதறிக் கிடப்பதாலும், ஒரு மாகாணத்தில் பிரசுரமாகும் ஹிந்திப் பத்திரிகை இதர மாகாணங்களில் வியாபகமுடையதாக இருக்க முடியவில்லை. இதனால் தற்போதைய நிலைமையில் ஹிந்திப் பத்திரிகைகள் அதிக சந்தாதார்களுடையதாக இருக்க முடியவில்லை. சுமார் ௫ கோடி ஜனங்கள் வங்காளிபாஷை பேசுகிறார்கள். அவர்கள் வங்காளத்திலேயே வசித்து வருகிறார்கள். இருந்தாலும் அவர்களிற் பெரும்பாலோர் எழுத்து வாசனை யில்லாதவர்களாக இருப்பதால் வங்காளிப் பத்திரிகைகளுக்கும் அதிக சந்தாதார்கள் இருக்கவில்லை. இதர தேச பாஷைகளை வழங்கும் வகுப்பினர் ௨ கோடிக்குக் குறைவானவர்களாகவே இருக்கிறார்கள். பல பாஷைகள் வழங்குவோர் லட்சக்கணக்கினராகவே இருக்கிறார்கள். பிரிட்டிஷாரால் நடத்தப்படும் ஆங்கிலப் பத்திரிகைகளுக்கும் பல மாகாணங்களில் சந்தாதார்களிருந்து வருகிறார்கள். இந்தியப் பத்திரிகைகளைவிட பிரிட்டிஷாருக்குச் சொந்தமானவைகளும் பிரிட்டிஷாரால் நடத்தப்படுபவைகளுமான பத்திரிகைகள் அதிக செழிப்பாக இருக்கின்றன. ஏனெனில், இங்கு வசிக்கும் பிரிட்டிஷார் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக இருப்பதுடன், பத்திரிகைகளை வாங்கச் சக்தியுடையவர்களாகவுமிருக்கிறார்கள். மேலும், இந்த தேசத்தின் வியாபாரம் தொழில் முதலியவைகள் அவர்களுடைய கையிலிருப்பதால் விளம்பரங்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. நம்மவர் எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டு நமது தேசத்தின் வியாபாரம் நமது கைக்கு வந்தாலன்றி இந்தியப் பத்திரிகைகள் செழிக்கவும் இந்தியப் பத்திரிகைகள் அதிகமாக முளைக்கவும் சாத்தியமில்லை.

நம்மவர் எழுத்துவாசனை யில்லாதவர்களாகவும் இதர வழிகளில் கஷ்டப்படுகிறவர்களாகவும் இருப்பதோடு, தபால் கட்டண விகிதமும் நமது பத்திரிகைகளின் சந்தாதார்கள் தொகை அதிகரிப்பதற்கு இடையூறாகவிருக்கிறது. ஜப்பானில் கார்டின் விலை ௨ இ பைசாவே இருந்தும், இந்தியாவில் ௬ பைசா வாங்கப்படுகிறது. ஜப்பானில் பத்திரிகைகளுக்குக் குறைந்த தபால் கட்டணம் ௧½ பைசாதான்; ஆனால் இங்கு ௩ பைசாவாக இருக்கிறது. இதர விஷயங்களிலும் ஜப்பானுக்கும் நமது தேசத்திற்கும் அதிக வித்தியாசமிருக்கிறது. இத்தியாதி காரணங்களால் ஜப்பானின் ஜனத்தொகை குறைவாகவிருந்தும், இந்தியாவில் கடிதப் போக்குவரத்துகள் குறைவாக இருக்கின்றன. இதன் விவரத்தைக் கீழே புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்:—

பத்திரிகைத் தொழில்.

(மூன் பக்கத் தொடர்ச்சி.)

தேசம்.	ஜனத்தொகை.	தபால்கள்.	வருஷம்.
இந்தியா	௩௧௮,௯௪௨,௪௮௦	[illegible]	௧௯௨௫—௨௬
ஜப்பான்	[illegible]	[illegible]	௧௯௨௦—௨௧

டைப்ரைட்டிங் இயந்திரங்கள் சிருஷ்டியான பிறகு, பத்திரிகைகளுக்கு வியாசங்களைத் தெளிவாக அச்சிட்டு அனுப்புவதற்கு வழி ஏற்பட்டுவிட்டது. ஆனால், தேசபாஷைகள் சம்பந்தப்பட்டமட்டில் அதிக வசதி இந்த இயந்திரங்களால் ஏற்படவில்லை. ஏனெனில் தேச பாஷைகளின் எழுத்துக்கள் பலவகைப்பட்டவைகளாக இருப்பதால், எல்லாவற்றிற்கும் டைப்ரைட்டர்கள் ஏற்படவில்லை. சில தேசபாஷைகளுக்காகத் தயாரிக்கப்பட்டிருக்கும் டைப்ரைட்டர்களும் ஆங்கில டைப்ரைட்டர்களைப்போல உபயோகத்திற்கு அவ்வளவு சவுகரியமாக இருக்கவில்லை.

இரண்டாவதாக, அச்சுக்களைத் தயாரித்தல், லைனோடைப் முதலிய வசதிகளும் தேச பாஷைகளுக்கு இல்லாமலிருக்கின்றன. அந்த வசதிகள் ஏற்படாவிடில் ஆங்கிலப் பத்திரிகைகளைப்போல் எல்லா சமாசாரங்களையும் தேசபாஷைப் பத்திரிகைகள் வெளியிடுவது சாத்தியமில்லை. தவிரவும், தேசபாஷைப் பத்திரிகைகளுக்கு அனுப்பப்படும் செய்திகள் ஆங்கிலத்தில் அனுப்பப்படுவதால் அவைகளை மொழிபெயர்த்துக் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆங்கிலத்தில் ரிபோர்ட்டு செய்யப்படுவதுபோல் தேசபாஷைகளிலும் ரிபோர்ட்டு செய்வதற்கு வேண்டிய வசதி ஏற்படவில்லை. ஆகையால் ஆங்கிலத்தில் கிடைக்கும் ரிபோர்ட்டுகளை தேசபாஷைகளில் மொழிபெயர்க்கவேண்டியிருக்கிறது. ஆங்கிலப் பத்திரிகைகள் சாதாரண ஜனங்களுடைய ஆவலைப்பூர்த்தி செய்துவைப்பது சாத்தியமில்லாதபடியினாலேயே நான் இந்த விஷயங்களையெல்லாம் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்தியாவில் படித்தவர்களாக இருக்கும் ௨,௬௨,௬௧,௬௧௨ ஜனங்களில் ௨,௫௨௧,௩௫௦ பேர்தான் ஆங்கில பாஷா ஞானமுடையவர்களாக இருக்கிறார்கள். ஆரம்பக்கல்வியைக் கட்டாயமாகவும் இலவசமாகவும் போதிக்க ஆரம்பித்து விட்டால் ஆங்கிலந் தெரிந்தவர்களின் தொகை குறையுமேயன்றி அதிகரிக்காது. ஆகவே இந்தியாவில் பத்திரிகைத்தொழில் அபிவிருத்தி யடையவேண்டுமாயின், தேசபாஷைப் பத்திரிகைகளின் மூலமாகவே அது சாத்தியப்படும்.

பத்திரிகைத் தொழிலைப்போதிக்க ஒரு ஸ்தாபனம் சென்னையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சர்வகலாசாலைகள் இருந்துவரும் எல்லா இடங்களிலும் எல்லா வசதிகளுமுள்ள இத்தகைய ஸ்தாபனங்களை ஏற்படுத்தவேண்டும். இந்த ஸ்தாபனங்களில் நிருபர் தொழிலையும் கற்றுக்கொடுக்க வேண்டியிருக்குமாதலால் தேச பாஷைகளில் ரிபோர்டு செய்யவும் கற்றுக் கொடுக்கவேண்டும்.

பத்திரிகைத் தொழில் அபிவிருத்தி அடைவதானது அசலபமான விலைக்கு காகிதம், மை முதலியவைகள் கிடைப்பதைப் பொறுத்திருக்கிறது. அவைகளை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் இந்தியாவில் ஏராளமாகக் கிடைக்கின்றன. நமக்கு வேண்டிய காகிதத்தையும் மையையும் நாமே உற்பத்திசெய்துகொண்டால் நாம் வெகுதூரம் முன்னேறியவர்களாவோம். நமக்கு வேண்டிய அச்சு இயந்திரங்களை நாமே உற்பத்திசெய்து கொள்ளுவதும் அனுகூலமாக இருக்கும். இதை உடனே செய்வது சாத்தியமில்லையெனினும் இதற்குவேண்டிய உலோகப் பொருள்கள் நமது நாட்டில் கிடைக்கின்றன.

பெரிய பத்திரிகாலயங்களுக்கு படங்களை எடுக்கும் கருவிகளும் வேண்டும். இத்துறையில் இந்தியா எந்த அளவு தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக் கூடுமென்பதை நிபுணர்கள்தான் சொல்ல வேண்டும். அந்நிய நாட்டுச் செய்திகளை அனுப்பும் வேலை அந்நிய நாட்டினர் கையிலிருப்பது இந்தியப் பத்திரிகைகளுக்குப் பெரிய அசௌகரியமாக இருக்கிறது. நமக்கு வேண்டாத பல செய்திகளை ராய்ட்டர் ஸ்தாபனம் அனுப்புகிறது; நமக்கு வேண்டிய செய்திகளை அது அதிகமாக அனுப்புவதில்லை. தவிரவும் நமக்கு அனுப்பப்படும் செய்திகளும் பிரிட்டிஷாருக்குச் சவுகரியமான வழியில் திரித்து அனுப்பப்படுகின்றன. ஸைமன் கமிஷன் சம்பந்தமான செய்திகளை பிரீபிரெஸ் லண்டனிலிருந்து அனுப்பி நமக்கு நல்ல உதவி செய்தது. இவ்விதம் சாசுவதமாகவே செய்திகளை அனுப்பி வருவதற்கு சுயேச்சையுள்ள ஸ்தாபனங்கள் ஏற்படவேண்டும். நமது தினசரிப் பத்திரிகைகள் சிலவற்றிற்கு லண்டனில் நிருபர்கள் இருக்கிறார்கள். இதர முக்கிய தேசங்களின் தலைநகர்களிலும் பிரதிநிதிகள் இருக்க வேண்டும். பல மாகாணங்களில் பிரசுரமாகும் பத்திரிகைகளுக்கு இதர மாகாணங்களிலும் நிருபர்கள் இருந்து வருகிறார்கள். ஒவ்வொரு பத்திரிகாலயத்திலும் இதர மாகாணங்களில் பிரசுரமாகும் தேச பாஷைப் பத்திரிகைகளில் காணப்படும் முக்கியமான செய்திகளை எடுத்துப் பிரசுரிக்க கெட்டிக்காரர்களான யுவர்கள் இருந்துவரவேண்டும். ஜெர்மனியில் அனுஷ்டானத்திலிருந்துவரும் அப்பிமரண்டிஸ் முறையை இங்கும் அனுஷ்டிப்பது உபயோகமாகவிருக்கும். ஆனால் பல மாகாணங்களிலுள்ள தினசரிப் பத்திரிகைகள் இதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். இவ்விதம் இந்தியா முழுவதையும்பற்றித் தெரிந்துகொண்டால், குறுகியபுத்தி மறைந்து, நமது திருஷ்டி விசாலமடையும்.

அகில இந்தியப் பத்திரிகைக்காரர்கள் சங்கம் ஒன்று இருப்பதுடன், அதற்கு ஒவ்வொரு மாகாணத்திலும் கிளைஸ்தாபனமிருந்துவர வேண்டும். ௧௮௬௦-ம் வருஷத்திய ௨௫-வது சட்டப்படி இவைகளைப் பதிவுசெய்ய வேண்டும். இந்த சங்கமானது ஒரு மாதாந்தப் பத்திரிகையை நடத்திவர வேண்டும். பத்திரிகைக்காரர்கள் அனுஷ்டித்துவர வேண்டிய தர்மங்களைப்பற்றி அதில் எழுதவேண்டும். இத்தகைய ஸ்தாபனங்களும், ஒத்துழைப்பும் இல்லாவிடில், பத்திரிகைகளுக்குரிய அந்தஸ்தை நாம் அடையமுடியாது. இந்த ஸ்தாபனங்களில் புத்தகாலயங்களும் இருந்துவரவேண்டும். இவைகளில் எல்லாப் பத்திரிகைகளையும் வைத்திருக்கவேண்டும். எல்லா மாகாணங்களிலும் பத்திரிகைக்காரர்களின் பாதுகாப்புக்காக ஒரு நிதியை ஏற்படுத்தவேண்டும். இறந்துபோகும் பத்திரிகைக்காரர்கள் குடும்பங்களுக்கு உதவி செய்வதற்காகவும் சகாய நிதியொன்றை ஏற்படுத்தவேண்டும்.

மாகாண வாரியாக பத்திரிகைத் தொழிலில் ஏற்பட்டு வந்திருக்கும் அபிவிருத்தியைப்பற்றிய புத்தகம் இல்லாமலிருக்கிறது. மாகாண வாரியாக எழுதினால் இந்தியா முழுவதற்குமாக ஒரு புத்தகத்தை வெளியிடலாம்.

சு. மி.

மதிப்புரை.

எனது குருநாதர்.

[மொழி பெயர்த்தவர்:—ஆர். நாராயணசாமி ஐயர். பக்கம்: ௬௭. விலை எட்டணா. கிடைக்குமிடம்: ஸ்ரீசாதாத்தின சற்குரு புத்தகசாலை, பி. டி. சென்னை.]

இது சுவாமி விவேகாநந்தர் நியூயார்க் பட்டினத்திற் செய்த ஓர் அரிய உபந்யாசத்தின் மொழி பெயர்ப்பாகும். தமது குருமூர்த்தியான ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரைப்பற்றி சுவாமிகள் கூறும் பக்தி நிறைந்த உரைகள் யாவரும் படித்துணரத் தக்கனவாகும். பரமஹம்ஸ தேவாது உருவப்படமொன்றும் இணைக்கப் பட்டுளது. நல்ல காகிதத்தில் அச்சிடப் பெற்றிருக்கிறது.

ஃ ஃ

பக்தி மார்க்கம்.

[ஆசிரியர்:— சுவாமி பரமானந்தா. பக்கம்: ௯௩. விலை அணு ஐந்து. கிடைக்குமிடம் ஸ்ரீராமகிருஷ்ணமடம், மைலாப்பூர். சென்னை.]

இது ஒரு அருமையான நூல். இதனைப் படிக்கும்போது நேருக்கு நேராக சுவாமிகள் நின்று பேசவதுபோல் காணப்படுகிறது. பக்தி, பரிசுத்தம், உறுதி, பயமின்மை, ஆத்மதியாகம் எனும் ஐந்து பகுப்புக்களாக யாக்கப்பட்டிருக்கும் இந்நூலின் ஒவ்வொரு பகுதியும் ஒளிபெற்று விளங்குகிறது. இதனை ஒவ்வொருவரும் நித்திய பாராயண புத்தகமாக வைத்துக் கொள்ளல் தகும். வாலிபரொவ்வொருவரும் இதனைத் தவறாது வாங்கிப்படித்துப் பயன் பெறுமாறு வேண்டுகிறோம். இதனைத் தமிழில் இனிமைபெற மொழிபெயர்த்துதவியிருப்பவர் திரு. ஆர். ராமகிருஷ்ணன் பி. எ., அவர்களாவார்.

ஃ ஃ

முத்தி நெறி.

[ஆசிரியர் :— இராமகிருஷ்ணானந்த சுவாமிகள். பக்கம்: ௧௧. விலை: அணு இரண்டு. கிடைக்குமிடம்: ஸ்ரீராமகிருஷ்ணமடம், மைலாப்பூர், சென்னை.]

இந்நூல் சுவாமிகளால் ஆங்கிலத்தில் செய்யப்பெற்ற ஒரு உபந்யாசத்தின் மொழி பெயர்ப்பாகும். முத்தி நெறி யென்பது மனித அறிவுக்கு அப்பாற்பட்ட பெரியபூதமென்று கருதியிருக்கும் தமிழ மக்களுக்கு இம் மாதிரியான நூல்கள் பெரும்பயனளித்தல் கூடும். இங்கு முத்திநெறியானது கேட்பவருக்கும் சொல்பவருக்கும் விளங்காத நிலையில் உபதேசிக்கப் பெறுவ தியல்பு. சுவாமிகள் முத்தி நெறியைச் சாதாரண வாழ்க்கை நெறியில் வைத்து விளக்கிச் செல்கின்றார்கள்.

> "மேனுக்கு ஒன்றுமின்றி ஓய்ந்து கிடக்கிறவர்கள்தான் கூலியாட்களாவதற்கெனத் தலையிலெழுத்து வாங்கினவர்கள். அவர் செக்கைச் சுற்றிச் சுற்றி நாள் முழுதுஞ் சுழன்றும் தாம் சென்ற வழியில் நீங்க மாட்டாத எருதுகளைப் போல்வார்"

என்று கூறப்பெறும் வாக்கியங்களை ஈண்டுள்ள வரட்டுச் சமயவாதிகள் உணரல் வேண்டும். இம்மாதிரியான அறிவுப்பணி புரிய முன்வந்துழைத்து வரும் ராமகிருஷ்ண மடத்தாரின் செயல் பாராட்டற்குரியது.

ஃ ஃ

சாரதையின் தந்திரம் முதலிய கதைகள்.

[ஆசிரியர்: — ரா. கிருஷ்ணமூர்த்தி. பக்கம். ௧௬௧. விலை பன்னிரண்டணு. கிடைக்குமிடம்: முருகவேள் புத்தக சாலை, இராயப்பேட்டை, சென்னை.]

இதில் தனிப்பட்ட எட்டுக்கதைகள் அடங்கியுள்ளன. இக்கதைகள் யாவருக்கும் விளங்கும்படியான இனித்ததமிழில் காலத்திற் கேற்ற சீர்திருத்தத் துறைபற்றி எழுதப்பட்டிருக்கின்றன. ஆண்மக்கள் மனம் மாறியவழியில் செல்லுமபோது பெண் மக்கள் சீர்திருத்தும்படியான சக்திபெற்றிருத்தல், வீண் விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு கோர்ட்டேறி வழக்கிடுவதாலுண்டாகும் கஷ்டங்கள், கிழவர்கட்கு இளம் பெண்களை விவாகஞ் செய்ய முற்படுவதாலுண்டாகும் கஷ்டங்கள், அரசியல்வாதிகளின் சுயநலப் பித்தலாட்டங்கள், தற்கால ஆங்கிலக் கலாசாலைப் படிப்பினாலுண்டாகும் தயாரங்கள், தீண்டாமைப் பயித்தியம், சோதிடம் புதையலெடுத்தல் போன்றவற்றிலுள்ள ஏமாற்றங்கள், செல்வர்களின் பொருளற்ற பெருமை ஆகிய விஷயங்கள் ரசமான கதைகள் மூலம் விளக்கப்பட்டிருக்கின்றன. கதையின் போக்கு, தமிழின் சுவை, கொள்கைகளின் சிறப்பு ஆகிய மூன்றினையும் ஒருங்கே பெற்றுள்ள இக்கதைகளை ஒவ்வொருவரும் படிக்கவேண்டியதவசியமாகும். நல்ல காகிதத்தில் நன்றாக அச்சிடப்பட்டிருக்கிறது.

ஃ ஃ

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

[ஆசிரியர் :— எஸ். எஸ். வாஸன் ௨௪௦ பக்கங்கள். காலிகோ கட்டிடம் விலை ரூ ௨—௦—௦. கிடைக்குமிடம் வாசன் புத்தகசாலை, தபால் பெட்டி ௧௧௯. ௯௭ அண்ணாப்பிள்ளை தெரு சென்னை ஜி. டி.]

ஆங்கிலநூலாசிரியர் கருத்துக்களை மேற்கொண்டு நூல்யாக்கப்பட்டிருக்கிறது. மண வாழ்க்கை நடாத்தும் நாயகியும் நாயகனும் அறிந்து நல்வாழ்வு நடாத்துதற்குரிய பல அரிய விஷயங்கள் நூலில் விளக்கமாக உரைக்கப்பட்டிருக்கின்றன. காமத்தின் நிலை, காதலின் தன்மை, ஒழுங்கு தவறாது வாழ்வதன் சிறப்பு ஆகியவைகள் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. நூலில் ஆசிரியர் சிற்றின்ப விஷயங்களை வெட்டவெளியாக யாவரும் அறிந்துகொள்ளும்படி எடுத்துரைப்பதோடு முறைவதறிச் சிற்றின்பம் நுகர்வதின் தீமையையும் முறையுடன் அனுபவிப்பதன் நன்மையையும் வெகு சிரத்தையுடன் எடுத்துரைக்கின்றார். நூல் பெரிதும் யாவராலும் படித்துப் பயன்பெறத்தக்கதேயாகும். இத்தகைய நூல்கள் அறியாமையால் எழும் காமக் கொடுமையை அகற்றி வாழ்வதற்கு உதவி புரிவனவே. இல்வாழ்வு வாழும் இளம் பருவத்தினர் இதனைப்படித்தல் பயனுடையதாகும்.

ஃ ஃ

ஜாதி அல்லது முகுந்தன் பறையனான கதை.

[ஆசிரியர்:— ச. ராஜகோபாலாசாரியார். பக்கம்: ௪௧. விலை: இரண்டணு. கிடைக்குமிடம் காந்தி ஆசிரமம், புதுப்பாளையம், திருச்செங்கோடு.]

இது அளவில் சிறிதாயிருப்பினும் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டு திகழ்கிறது. இதில் பறையர்களின் இரக்கம், அன்னாரின் உழைப்பு, உயர்வகுப்பாரின் இரக்கமற்ற கொடுந்தன்மை, கிராமங்களின் சுகாதாரக் கேடு, தாழ்ந்த வகுப்பாரிடம் படிந்து கிடக்கும் அடிமைப்புத்தியின் ஆழம், குடியின் கேடு, முதலிய விஷயங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. தற்காலப் படிப்பினால் வைதீகக் கொடுமை யொழிந்து வருதல் ஆங்கில வைத்திய நூல் கற்ற முகுந்தன் மூலமாக வெளிப்படுகிறது. செய்தவினை விடாமற் பீடிக்கும் என்ற கருத்து முடிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. புத்தர் ஜாதகக் கதைகளைப்போல் அரும்பெருங் கொள்கைகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. சிறிய வடிவும் பெரிய கருத்துங் கொண்ட இக்கதையை யாவரும் படித்தறிய வேண்டியதவசியமாகும். கதை படிப்பதற்கு இனிமையாகவும் உற்சாகம் தரும்படியாகவும் எழுதப்பட்டுளது. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளை யெண்ணிய இப்புத்தகம் மிகப் பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டிருப்பதால் ஒவ்வொரு குழந்தையும் இதனைப்பெற்றுப் படிக்குமாறு செய்தல் ஆங்காங்குள்ள மெய்யன்பர்களின் கடமையாகும். விலையும் அதிகமில்லை. நல்ல காகிதத்தில் நன்றாக அச்சிடப்பட்டிருக்கிறது.

* நாட்டுத் துரையும் காட்டுத் துரையும்.

ஜ. கிருஷ்ணமூர்த்தி மொழிபெயர்ப்பு.

ஒருநாள் ஒளிர்கின்ற சூரியப்பிரகாசத்தில் ஜ்வலிக்கின்ற வாழைக்குலைகளினிடையே ஸ்ரீமான் காட்டுதுரை (குரங்கு) காற்று வாங்கிக்கொண்டிருந்தார். அவருடைய அழகிய குஞ்சம் போன்ற வால் முதுகின்பேரிலும் தோளின் மீதிலும், சிற்சில சமயங்களில் மரங்களின் கிளைகளின் பேரிலும் துலங்கி விளங்கிவந்தது. நாம்புறமும் நறுமணம் வீசிக்கொண்டிருந்தது. பழுத்திருக்கும் பல மாங்கள் அடர்ந்து காணப்பட்டன. ஸ்ரீமான் (குரங்கர்) சிற்சில சமயம் பழங்களைப்பறிப்பதும், அவைகளை உரிப்பதும், சிலவற்றை உறிஞ்சுவதும், நக்குவதும், கடிப்பதும், விழுங்குவதுமாகப் பலவாறு அவைகளை உள்ளே செலுத்தி அவைகளின் ருசியைப்பற்றி மனதிற்குள் 'மதிப்புரை' எழுதிக்கொண்டிருந்தார்.

இதற்குள் தற்செயலாக கோட், பூட்ஸ், கைக்கோல், சங்கிலி, மூக்குக் கண்ணாடி, சுருட் இவைகளால் அலங்கரிக்கப்பட்ட ஆங்கில டொப்பி (Hat) யணிந்த ஒரு நாட்டு துரை (நவநாகரீகர்) அங்கு வந்து சேர்ந்தார். இவரைத் தூரத்திலேயே கண்ணுற்ற நமது மஹாவீரர் மனதில், "இவர் யார்? நிறம் உருவம் இவைகளால் இவர் கிஷ்கிந்தா புரவாசியைப் போலவே காணப்படுகிறார். ஆனால் நடை உடை பாவனை புதிதாயிருக்கிறது. [illegible] இல்லை; இவர் எனது நாட்டுச் [illegible] ஆதலின் [illegible] வேண்டும்" என்று எண்ணலுற்றார்.

[illegible] யோசித்துக் கொண்டு [illegible] குரங்குமகான் மலைவாழைப் பழத்தில் ஒன்றைப்பறித்து அதனால் [illegible] சம்ஹாரம் செய்ய உத்தேசித்[illegible] இதற்குள் நமது நாட்டு துரை [illegible] வந்து "Good Morning [illegible] key! How do you do? So glad [illegible] you! Ah! I see you are [illegible] already"

கபி[illegible] —(ஆரியபாஷையில்) கிமி தமி? [illegible] வி?

நாட்டு துரை:— "What is that? I suppose that is the Kish Kinda [illegible] Glorious country— [illegible] "There is a land of [illegible] and pride" and so on—as you know"

வா[illegible] புத்திரவம்சகாரர்:—கஸ்துவம்? (நீர் யார்?) கஸ்மாத் ஜனபதாத் ஆகதோ? (எங்கிருந்து வருகிறீர்?)

நாட்டு துரை:— (தனக்குள்) It seem[illegible] barbarous gibberish [illegible] us lings of his; but I suppose I must put up with it (வெளியில்)

Dear Mr. Monkey, I am ashamed to confess that I am not quite familiar with your beautiful vernacular. I dare say it is a very polished language. I persume you can talk a little English"

இதைக் கேட்டதும் கோபம் கொண்ட ஹனுமார் கண்கள் சிவக்க தமது வாலால் நாட்டு துரையின் கழுத்திற்கு ஒரு முட்டியாணம் போட்டார். நாட்டுதுரைக்கு மூச்சுத் திணற ஆரம்பித்தது. முகத்திலிருந்த சுருட்டு கீழே விழுந்தது. அவர், "I say this seems some what—" என்றார்.

வால் இன்னும் கொஞ்சம் இறுக்கப்பட்டது.

"Some what un mannerly to say the beast—"

கழுத்தில் மற்றுமொரு சுற்று.

"Dear Mr. Monkey! You will hurt me',

தூக்கில் மாட்டப்பட்டார்.

"Kind—Good—Mr. Monkey"

இதற்குள் நாட்டு துரை அந்தரத்தில் தொங்கலுற்றார். சாமான்களெல்லாம் சிதறிவிழுந்தன. கடைசிநிமிடம் ஆய்விட்டது என்று கூறுவது போல கடிகாரம் பையைவிட்டு வெளியில் வந்து சங்கிலியில் ஊஞ்சலாட ஆரம்பித்தது. தலையிலிருந்த டொப்பி கீழே விழுந்து பிச்சைக்காரன் பானைபோல விளங்கிற்று. துரையின் முகம் விகாரத் தோற்றமுடையதாயிருந்தது.

அவர் "ராமபக்தரே! அபாரதத்தை க்ஷமித்தருளும். காப்பாற்ற வேண்டும். இல்லாவிடில் செத்தேன்" என்று கதறினார்.

ராமபக்தர் அவர்மீது தயவுகூர்ந்து தரைமீது தொப்பெனப் போட்டார். அதுவே தக்க தருணமென வறிந்து நாட்டுதுரை தமது சாமான்களை எடுத்து அவைகளை அவைகளினுடைய 'பதாஸ்தானங்களுக்கு' அனுப்பினார்.

அப்போது ஹனுமார், ஐயா! கோபித்துக்கொள்ளாதேயும். தங்களுடைய பேச்சும் நடையும் ஆங்கிலேயர் [illegible] மலைவிக்கிறது. [illegible] யார் [illegible] தெரியவில்லை. அதனைத் [illegible] கொள்வதற்காகவே தங்களுக்கு இவ்வளவு சிரமம் கொடுக்க நேர்ந்தது. இப்போது தாங்கள்—"

நாட்டு துரை:— 'யாரெனத் தெரிந்தது?'

வாயுபுத்திரர்:— தாங்கள் தமிழ் நாட்டுப் பெற்றோர்களுக்கு பிறந்தவரென்று. தாங்கள் மிகவும் களைத்திருக்கிறீர். வாழைப்பழபோஜனம்செய்யும்.

நாட்டுதுரைக்கு அபாரமாய்ப் பசியெடுக்கவாரம்பித்தது. அதனால் அவர் "With the greatest pleasure" என்றார்.

குரங்கு:—ஐயா! தாங்கள் பிறந்த தேசமாகிய தமிழ்நாட்டிற்கு நான பன்முறை சென்றிருக்கிறேன. அங்குள்ள ஸ்திரீகள் "வடாம்" என்ற ஜுனிய பொருளைத் தயார் செய்கின்றனர். அதுவும் இந்த ராமதாஸனுக்குப பன்முறை அவர்களின அனுமதியின்றியே கிடைத்திருக்கிறது. இதனால் எனக்கு தமிழ் பாஷையில் கொஞ்சம் பாண்டித்யமுண்டு. ஆதலின் இனி நீர் உமது தாய்மொழியிலேயே பேசலாம்.

நாட்டு துரை:— இதிலென்ன ஆச்சரியம்? தாங்கள் வாழைப்பழம அளிக்கவிரும்புகிறீர்கள். அதனை நான் ஆவலுடன் புசிக்க ஆர்வமுள்ளவனாயிருக்கிறேன்.

இதைக்கேட்டு கபிராசர் வாழைப் பழங்கள் பலவற்றைப் பறித்து நாட்டு துரையின் தலையில் பரிமாறினார். நாட்டுதுரையும் வானவர்க்கும் கிடைத்தற்கரிய வாழைப்பழங்களை வாயில் போட்டு வயிற்றில் தள்ளி அவைகளை சம்ஹாரம் செய்ய வாரம்பித்தார்.

வானரர்:—எப்படியிருக்கின்றன?

நாட்டுதுரை:—ரொம்ப-Delicious.

சாகாமிருகர்:-டொப்பிக்காரா! தாய் மொழியில் பேசு.

நாட்டு துரை:-மறந்துவிட்டேன் Excuse me.

பலிமுகர்:—அப்படியென்றால்?

நாட்டுதுரை:—மன்னியுங்கள். நான் மிகவும—சரி, என்ன சொல்லுவேன். தமிழ் Forgotten பாஷையில் எப்படிச் சொல்லுவேன்.

மர்க்கடர்:—குழந்தாய்! உன் வார்த்தைகளால் நான் சந்தோஷமடைந்தேன். உனக்கும் இன்னும் பழங்கள் வேண்டும்போல் காண்கிறது. வேண்டிய மட்டும் சாப்பிடு. வேறு எனக்குத் தகுந்த காரியம் ஏதாவதிருந்தாலும் கூறு.

நாட்டுதுரை:—வந்தனம் கபிபாசே! தாங்கள் எனக்கு ஒரு விஷயம் கூறினால் நலமாயிருக்கும்.

காட்டுதுரை:—என்ன விஷயம்?

நாட்டுதுரை:—நான ஒரு விஷயம் கேட்பதற்காகவே தங்களிடம் வந்தேன். தாங்கள் ராமராஜ்யத்தைப் பார்த்திருப்பீர். அம்மாதிரி ராஜ்யம் எப்பொழுதும் ஏற்பட்டதில்லையாமே. அது உண்மையா? சிலர் இவையெல்லாம் வெரும் "புரளி" என்கின்றனர்.

காட்டுதுரை:—(கண்களை சிவக்க வைத்துக்கொண்டு பல்லை நறநறவெனக் கடித்து) ராமராஜ்யம் புரளியா! வெரும் கட்டுக்கதையா! அப்படியானால் நானும புரளி—எனது வாலும் புரளிபோலும். சரி, சற்று "புரளி" எப்படியிருக்கிறதென்று பார்.

இவ்வாறு கூறிக்கொண்டே கபியாசர் கோபத்துடன் தனது நீண்டவாலை நாட்டுதுரையின் கழுத்திற்கு சரியான எல்லையாகச் செய்தார். அவர் முகம் வெளுத்துவிட்டது. அவர் "மகாராஜரே! போதும. நீரும் புரளியல்ல உமது வாலும புரளியல்ல. நான இதனை ஆயிரம ஆணையிட்டு சொல்லத் தயார். அதனால உமமுடைய ராம [illegible] பொய்யல்ல. The proof of pudding is in the eating thereof— [illegible] சந்திரின் [illegible] ரின் அடியான். உமமுடைய [illegible] பெரியவரா? எம்முடைய ஆங்கிலேயர் பெரியவரா? என்னுடைய ஆங்கிலேய ராஜ்யத்தில் ஒரு புதிய வஸ்து விருக்கிறது. அது உமமுடைய ராமராஜ்யத்திலுண்டா?

குரங்கு:—அது என்ன வஸ்து? பழுத்த வாழைபபழமா?

ஆங்கிலரடியான்:— இல்லை. Local Self Government.

குரஙகு:—இதென்ன இழவு?

ஆஙகிலரடியான்:—ஸ்தானிய ஆத்ம சாஸனம. அது அப்போதுண்டா?

ராமதாஸன்:—இல்லாமலென்ன? ஸ்தானிய ஆத்மசாஸனமே ஸ்தான விசேஷ ஆத்மசாஸனமாகும. அது தான எப்பொழுதுமிருக்கிறதே! என்னுடைய ஆதமசாஸனத்தின் ஸ்தானம எனவால. வாலால் ஆத்மசாஸனம செய்யாவிடில் திரேதாயுகத்தில் பாதி மனிதர் சமுத்திரத்தில் மூழ்கி இறந்திருப்பர். என்னுடைய வாலில அறுபபடுகரும்பொழுது அதாவது எவருடைய கழுத்திலாவது சுற்றித்திரிய விரும்பும்பொழுது நான் எனது வாலை ஆத்மசாஸனம செய்து அதாவது இரு கால்களுக்குமிடையிலிட்டு அடக்கவேண்டியிருக்கிறது. ஸ்ரீராமச் சந்திரானவர் சீதாதேவியை அக்னிப் பிரவேசம் செய்யும்படி கூறிய பொழுது நான் ஸ்தானிய ஆத்மசாஸனத்தைக் கைக்கொள்ளாவிடில் இவ்வால் ஸ்ரீராமரின் கழுத்தை தழுவியிருக்கும்.

நவநாகரிகர்:—தாங்கள் இதனை தப்பர்த்தம செய்துகொண்டிருக்கிறீர்கள். இப்படிபபட்ட ஆத்மசாஸனத்தைப் பற்றி நான் பேசவில்லை.

அஞ்சாவாலி:—சட், சொல்வதைக் கேள. ஸ்தானிய ஆத்மசாஸனம் மிகவும் நல்லது.

பிராமணர்களின் ஆத்மசாஸனம பொளி, வடை இவைகளில் நன்கு காணப்படுகிறது. உன்னுடைய ஆத்மசாஸனம்,

காட்டுதுரை:—எங்கே? முதுகிலா?

காட்டுதுரை:—இல்லை. உன்னுடைய முதுகு மற்றொரு சாஸனத்தின் இடம். உன்னுடைய ஆத்மசாஸனத்தின் உசித இடம் கன்னமே.

அவர்:—எப்படி?

குரங்கு:—நீ அழுகை வந்தபொழுதும் அழுவதில்லை இதானல்தான்.

அவர்:—இவைகளெல்லாம் [illegible] இந்த அர்த்தத்தில் ஆத்மசாஸனத்தை உபயோகிக்கவில்லை

குரங்கு:—அப்படியானால் நீ கூறுவதற்கு என்ன பொருள்?

அவர்:—சாஸனம் என்று எதற்குச் சொல்லுவது தெரியுமா?

குரங்கு:—நன்றாய்! நான் உன்னை அரைகிறேன். நீ என்னால் ஆளப்படுகிறாய். அதாவது சாஸிக்கப்படுகிறாய். இதன் பெயர்தானே சாஸனம்?

அவர்:—இது அல்லல். ராஜசாஸனம் என்னவென்று தெரியாதா?

குரங்கு:—தெரியும் ஆனால் நாம் அரசாரகாமல் ஆத்மசாஸனம் எப்படிச் செய்ய முடியும்?

அவர்:—(மனதில்) இதற்குத்தான் குரங்கு புத்தி என்றார் போலும், (வெளியில்). அரசன் தயைகொண்டு தன் [illegible] நமக்குக் கொடில்?

குரங்கு:— இதில் அரசனுக்குத்தான் [illegible]. தன் தலையிலிருந்த பெருத்த சுமையை மற்றொருவர் தலையில் வைத்துவிட்டு உல்லாசமாக ராணியுடன் இன்பமாயிருக்கிறான். [illegible] உழைத்து சாகவேண்டி வரும் இதைத்தானே [illegible] விஷய [illegible] ஆரம்பித்து விட்[illegible] ஹா ராமராஜ்யம்!

அவர்:— தங்களுக்கு இதுவும் தெரியவில்லை. Freedom, liberty என்றால் என்ன தெரியுமா?

குரங்கு:—கிஷ்கிந்தாபுரப் பள்ளிக்கூடத்தில் இவையெல்லாம் கற்பிக்கப்படுவதில்லை.

அவர்:— Freedom என்றால் ஸ்வாதீனம். ஸ்வாதீனமென்றால் என்ன?

குரங்கு:— நான் வனவிலங்குதானே எனக்குத் தெரியாமலா உனக்குத் தெரியப் போகிறது?

அவர்:— சரி. மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு ஸ்வாதீனமடைகிறானோ அவ்வளவுக்கவ்வளவு சுகமடைகிறான்.

குரங்கு:— அதாவது மனிதனில் எவ்வளவு மிருகத்தன்மை ஏற்படுமோ அவ்வளவு சுகம ஏற்படும்.

அவர்:— ஐயா! கோபித்துக்கொள்ளாதேயும். நீங்கள் குரங்கைப்போல் பேசுகிறீர்.

குரங்கு:— நான்தான் குரங்காயிற்றே. உம்மைப்போல் எப்படி நாகரிகமாய்ப் பேசுவேன்?

அவர்:—ஸ்வாதீனமின்றி மானிடஜென்மம் மிருகஜனமமே. பராதீனமுடைய மனிதர், பசு, எருமை இவைகளைப் போல் கட்டுண்டு கஷ்டப்படுகின்றனர். பாக்யவசமாய் எங்கள் ராஜர்கள் பிறபினாலேயே Freeborn ஸ்வாதீனமுடையவர்கள்.

குரங்கு:— நாங்கள்?

அவர்:— ஆங்கி[illegible] இனத்தில் ஸ்வசாஸனம ஆத்மசாஸன . அதாவது ஸ்வய ஆட்சி.

குரங்கு:— [illegible] அந்த லட்சணமுள்ளவர்கள் [illegible] எங்களுள் சுயஆட்சியே அன்றி அரசாட்சி கிடையாது. நாங்கள் ஸ்வாதீனமுடைய இனத்தினர். நீ என்னைப்போலாக முடியுமா?

அவர்:—போதும் போதும் குரங்கின் [illegible] சுயஆட்சி ஏற்படுத்த நான் அறிந்துகொண்டேன்

காட்டுதுரை:—மிகவும நன்று சரி, [illegible] கொஞ்சம வாழைப்பழம் [illegible] வேணுமா சாப்பிடும்.

*இஃது வங்காளி பாஷையின் சிறந்த நாவலாசிரியரும் பிரசித்திபெற்ற 'வந்தே மாதரா' கீதத்தின் ஆசிரியருமாகிய காலஞ்சென்ற ஸ்ரீமான் ராய்பகதூர் பங்கிம்சந்திர சட்டோபாத்யாயர் C. I. E. அவர்கள் எழுதிய ஓர் சிறு ஹாஸ்யக் கதையின் மொழிபெயர்ப்பு.

அயலகம்.

இங்கிலாந்தில் தினம் ஒன்றுக்கு இருநூறு லட்சம் சிகரெட்டுகள் குடிக்கப்படுகின்றனவாம்.

ஃ ஃ

சில தினங்கள் முன் இங்கிலாந்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் சுமார் ௫000 பேர் வீடு இல்லாது தவிக்கின்றனர்.

ஃ ஃ

லார்டு இர்வினுக்குப் பிறகு ஸர்ஜான் சைமன் இராஜப் பிரதிநிதியாக வரக்கூடுமென ஊகிக்கப்படுகிறது.

ஃ ஃ

சில்நாயில் திடீரென ஒரு சுரங்கத்தில் வெடிவிபத்தேற்பட்டபடியால் கஉ0 பேர்கள் அப்படியே அடியில் புதைக்கப்பட்டனர்.

ஃ ஃ

இதாலியா தேசத்தில் மிக உயர்ந்த சி.ஓ.எ. பட்டத்தை ஆப்கன் அரசருக்கு இதாலியா மன்னரால் அளிக்கப்பட்டது.

ஃ ஃ

இங்கிலாந்தில் உள்ள இந்திய வர்த்தகர்களின் சங்கமொன்றை லண்டனில் அமைப்பதென்று ஏற்பாடாயிருக்கிறது.

ஃ ஃ

ரையோடி ஜானிரோ என்ற இடத்தில் ஒரு குடியானவனின் மனைவிக்கு தாடியுடனும் மீசையுடனும் ஓர் குழந்தை பிறந்திருக்கிறதாம்.

ஃ ஃ

இதாலியாவில் விவசாயத்தை ஒருபிரதான கைத்தொழிலாகச் செய்ய வேண்டி அரசாங்கத்தார் உ0 கோடி லயர் ஒதுக்கி வைத்திருப்பதாகத் தெரிகிறது.

ஃ ஃ

அமெரிக்கா கடற்படை இலாகாக்காரர் எகூ௫ கோடி பவுன் செலவில் ௫ கப்பல்களும் கூஉ சப்மரீன்களும் கட்டும்படி திட்டம் போட்டிருக்கிறார்கள்.

ஃ ஃ

ராணுவத்தில் கௌரவமடைய இதாலிய ஸ்திரீகள் புருஷர்களுடன் இப்பொழுது போட்டிபோட ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு அமெஸான் படையை ஏற்படுத்த அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

ஃ ஃ

சில தினங்கள் முன் சிங்கப்பூரிலிருந்து ஏராளமான ரப்பர் சாமான்களை ஏற்றிவந்த 'பிரசிடெண்டு போக்' என்ற கப்பலில் தீப்பிடித்துக் கொண்டது. லட்சக்கணக்கான டாலர்கள் நஷ்டமெனத் தெரிகிறது.

ஃ ஃ

ஹெட்சாஸ் சுல்தான் சமூக சீர்திருத்தம் சம்பந்தமாக வெளியிட்டுள்ள உத்தரவுகளுள், கள், சுருட்டு, குடிப்பதைத் தடுப்பதும், பொது ஸ்தலங்களில் ஆண் பெண்கள் கலப்பது குற்றம் என்பதும் காணப்படுகின்றன.

ஃ ஃ

அமெரிக்காவில் கப்பல் வியாபார இலாகா தலைவராயிருந்த ஸ்ரீ ஆல்பர்ட் லஸ்கரும் அவருடைய மனைவியும் ௧0 லட்சம் டாலர் (அதாவது ௩0 லட்சம் ரூபாய்க்கு) மேல் சிகாகோ சர்வகலாசாலையில் வைத்திய ஆராய்ச்சிக்காக உதவியிருக்கிறார்கள்.

ஃ ஃ

சில தினங்களுக்கு முன் கென்யாமுழுவதிலும் பூகம்பம் ஏற்பட்டது. பாரிங்கோரிக்கு சமீபத்தில் கூ மைல் நீளமுள்ள ஒரு பெரிய வாய்க்கால் போன்ற வெடிப்பு பூமியில் ஏற்பட்டிருக்கிறதென்றும் பல கல் கட்டிடங்கள் இடிந்து விழுந்துவிட்டனவென்றும் ஒரு செய்தி எட்டுகிறது.

ஃ ஃ

டான்யூப் நதி அடியுடன் உறைந்துபோய் விட்டபடியால் சுமார் ஐந்து டன் வெடிகுண்டுகள் ஆகாய [illegible]னத்திலிருந்து கீழே போடப்பட்டது. [illegible]னிக் கட்டிகளை உடைத்து அதிக வெள்ளம் மேற்படா வண்ணம் தடுக்க இம்முறை அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

ஃ ஃ

ஆராய்ச்சி வல்லுநரான சர். பிரான்சிஸ் எங்கஸ்பண்டு விண்மீன்களின் (நட்சத்திரங்கள்) சில கோள்களில் நம்மைவிட உயர்ந்த மாந்தர்களிருக்கிறார்களென்றும் அவைகளில் ஒன்றில் உலகத்திற்குத் தலைநாயகமாய் எங்கும் வியாபகமாய் உள்ள ஒருவர் இருக்கிறார் என்றும் தாம் புதிதாய் வெளியிட்டுள்ள 'விண்மீன்களின்வாழ்க்கை' புத்தகத்தில் கூறியுள்ளார்.

தாயகம்.

பம்பாய் மாகாணத்தில் ககூஉஎ-ம் வருஷம் ஜெனனம் எக0ககூ பேர்கள் அவ்வருஷத்தில் மரணம் ௫சஎஉகூச பேர்.

ஃ ஃ

இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும் மெக்காவுக்கு ஹிஜ்யாத்திரை செல்ல முஸ்லிம்கள் புறப்பட்டுக்கொண்டிருக்கிறார்களெனத் தெரிகிறது.

ஃ ஃ

அவசர நாணயச் செலாவணியாக இம்பீரியல் பாங்கு சென்ற மூன்று வாரங்களுக்குள் கூ கோடி ரூபாய் நோட்டுக்கள் வெளியிட்டிருக்கிறது.

ஃ ஃ

டில்லியில் நடைபெற்ற மந்திரிகள் மகாநாட்டில் ஆரம்பக்கல்வியைப் பாதிக்கும் விஷயங்களும் மற்றும் மாற்றப்பட்ட இலாக்காக்களின் முக்கிய விடயங்களும் வாதிக்கப்பட்டனவாம்.

ஃ ஃ

ககூஉஎ-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் இந்தியகடல், நில சுங்கவருமானம் உப்புவரி நீக்கி மொத்தம் சகஉ லட்சம் ரூபாய். ககூஉசு-ல் டிசம்பரில் கூ௫அ லட்சம் ரூபாய் தான் வருமானம்.

ஃ ஃ

சிலதினங்கள் முன் அகிலஇந்தியசாரணச் சிறுமிகள் பயிற்சிச் சாலையை நாகபுரியில் லேடி பட்லர் திறந்து வைத்தார். இந்தியாவின் எல்லாபாகங்களிலிருந்தும் கூஉ சாரணச் சிறுமிகள் வந்திருந்தனர்.

ஃ ஃ

அமிருதசரஸிலுள்ள ஒரு சிறு பெண்ணுக்கு மின்சார முறையில் சிகிச்சை செய்துவந்த ஒரு இயற்கை வைத்தியரின் தவறினால் ஷை பெண் இறந்துவிட்டாளென்று வைத்தியர் மீது வழக்குத் தொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

ஃ ஃ

கல்கத்தாவில் பூமியின் உ0 அடிக்குக்கீழ் ஒரு பாதை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதன் சுற்றளவு ௩0 அடிகள் இருக்கின்றன. அதை சுராஜியுட் டௌலா கட்டியிருப்பாரென்று ஊகிக்கப்படுகிறது.

ஃ ஃ

ககூஉஎ டிசம்பர் ௩க-ந்தேதியோடு முடியும் அரைவருஷத்தில் இந்தியா இம்பீரியல் பாங்குக்கு ஏற்பட்ட மொத்த லாபம் ரூ ௩சஅக அ00. இதைப் பங்குக்காரர்களுக்கு வருஷத்திற்கு க00-க்கு கக என் பங்கிட்டு வருமானவரியின்றி கொடுப்பதென வெளியிடப்பட்டிருக்கிறது.

ஃ ஃ

சென்னைக் காங்கிரஸ் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைபபற்றி வாதிக்கவும் கட்டுப்பாடான வேலையை மும்முரமாய் செய்துவர வழிகாணவும் சபர்மதியில் ஜனவரி மாதம் உகூ-ந்தேதி கூடும் மகாநாட்டிற்கு மகாத்மாவின் சீடர்கள் யாவரும் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஃ ஃ

மைசூர் அரசாங்கம் அதிக குறைந்தவிலைக்கு தாழ்த்தப்பட்டவர் ஒவ்வொருவருக்கும் ௫ ஏக்கரா நிலம் தருவதாக உத்தரவிட்டிருக்கிறது. கொடுக்கப்பட்ட நிலத்தை அவரவர்கள் கடு வருஷத்திற்குள் பிறருக்கு விற்கக்கூடாதென்ற நிபந்தனையும் பிறப்பித்திருக்கிறது.

ஃ ஃ

கல்கத்தா துறைமுகத்தொழிலாளர்களுடைய சம்பளம் முதலிய குறைகளைக் கவனிப்பதாக துறைமுகக் கமிஷனர்களின் தலைவர் ஒப்புக்கொண்டுவிட்டதால் மூன்று வாரங்களாக வேலை நிறுத்தம் செய்திருந்த சுமார் உ000 தொழிலாளர்களும் வேலை செய்யத் திரும்பிவிட்டார்கள்.

ஃ ஃ

சில தினங்கள்முன் பம்பாயில் ஒரு சிறு குழந்தை தவறிச் சாக்கடையில் விழுந்து அடித்துக்கொண்டு போகப்பட்டது. ஆனால் நான்கு மணிநேரம் கழித்து சாக்கடைமேலேயிருந்த சுவரை இடித்து சாக்கடைக் குழாயிலும் துவாரமிட்டு குழந்தை வெளியிலெடுக்கப்பட்டது. குழந்தை செளகரியமாயிருப்பதாகத் தெரிகிறது.

ஃ ஃ

நேபாள மகாராஜா காசி பல்கலைக்கழகச் சார்பில் ஓர் ஆயுர்வேதக் கல்லூரி யேற்படுத்த ௫ லட்ச ரூபாய் நன்கொடையளித்துள்ளார்.

ஃ ஃ

ஜனவரி மாதம் க௩-ந்தேதி கட்டாக்கில் ஒரு சர்வே ஆகாய விமானம் ௩௫0 மைல் தூரம் சுற்றிக் கீழே இறங்கும் சமயத்தில் சேதமடைந்தது. உயிர்ச்சேதமொன்றுமில்லை.

ஃ ஃ

லார்டு இர்வின் சமீபத்தில் நேர்ந்த தனது மலேரியா சுரத்தாலும் இந்தியா மந்திரியுடன் அடிக்கடி தகராறு நேரும் காரணத்தாலும் தனது உத்தியோகத்தில் நீடித்திருக்கப் பிரியப்படவில்லை யென்று தெரியவருகிறது.

ஃ ஃ

கள்ளிக்கோட்டைக்குச் சமீபத்திலுள்ள ஸாமோரின் மகாராஜா தமது சமஸ்தானத்திலுள்ள எல்லாக் கோயில்களையும் மேற்பார்வை பார்க்கும் அதிகாரத்தை ஹிந்து மத பரிபாலன போர்டினிடம் விட்டுவிட ஒப்புக்கொண்டுவிட்டார்.

ஃ ஃ

கூர்ஜர வித்தியா பீடத்தின் ஐந்தாவது பட்டமளிப்புவிழா ஜனவரிமாதம் க௫-உ காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்றது. இவ்வருடத்தில் வித்தியாபீடத்தில் பட்டம் பெற்றவர்களின் தொகை உ0. இதுவரையில் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றோர் உசுஅ பேர்.

ஃ ஃ

சில தினங்களுக்கு முன் தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் சிலர் சிம்லா குன்றுகளிலுள்ள பாகட் சமஸ்தானத்திலிருந்த ஆரிய சமாஜத்திற்கு மாற்றப்பட்டனர். இவர்கள் பூணூல் அணிந்துகொண்டதற்காக ஷை சமஸ்தான அதிபதி அவர்களில் சிலருக்குச் சிறைவாச தண்டனையும் சிலருக்கு அபராதமும் விதித்திருக்கிறார்.

ஃ ஃ

சில தினங்கள் முன் பம்பாயில் இரண்டு பருத்திக்கிடங்குகளில் தீப்பற்றிக்கொண்டதால் சுமார் அ லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பருத்தி தீக்கிரையாயினவென்றும் ஜப்பானிய கம்பெனியார் பருத்தியேற்றியிருந்த ஒரு கப்பலில் தீப்பிடித்து சுமார் ஏழு அல்லது எட்டு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பருத்தி எரிந்துபோயிற்றென்றும் தெரிகிறது.

ஃ ஃ

இந்தியா மந்திரி சர்க்காரின் சார்பாகப் புதிதாக எ௫ லட்சம் பவுன் வருஷம் க-க்கு க00-க்கு ச௫ பவுன் வட்டிக்குக் கடன் வாங்க ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இந்தியாவில் ரயில்வே அபிவிருத்தி செய்யவும் ஜனவரி மாதம் உக-ம் தேதி அடைக்க வேண்டிய ௫0 லட்சம் பவுன் கடனைக் கொடுத்துத் தீர்க்கவும் இந்த யோஜனை செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஃ ஃ

ஜனவரி மாதம் க௫-ந் தேதி சர்வ கட்சி மகாநாடு காசியில் கூடிற்று. டாக்டர் அன்சாரி தலைமை வகித்தார். அம்மகாநாட்டில் அரசியல் கமிஷனைப் பகிஷ்கரிக்கவும் அக்கமிஷன் மெம்பர்கள் பம்பாயில் இறங்கும் தினமாகிய பிப்ரவரி ௩-ந் தேதி இந்தியா முழுவதிலும் கடையடைப்பு முதலியன நடத்த வேண்டுமென்றும், அன்று எங்கும் சர்வ கட்சிப் பொதுக் கூட்டங்கள் கூட்டி கண்டனத்தீர்மானங்கள்நிறைவேற்றவேண்டுமென்றும் ஒரே மனதாய்த் தீர்மானிக்கப்பட்டது.

ஃ ஃ

ஜோத்பூர்சமஸ்தானத்தில்கதருடையுடன் எவர் வந்தாலும் ரயில்வே போலீசார் மேல் அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டுமென்றும் இல்லாவிடில் சமஸ்தான அதிகாரிகள் போலீஸாரைக் கடுமையாக நடத்துவார்களென்றும் கூறப்படுகிறது. இதை யொட்டி 'தருண ராஜஸ்தான்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் சங்கரலால் வர்மா ஜோத்பூர் ஸ்டேஷனில் ரயிலிலிருந்து இறங்கியவுடன் ஒரு போலீஸ்காரன் அவரிடம்வந்து பெயர் விலாசம் முதலியவற்றையும் அவரைத் தாழ்மைப்படுத்தக் கூடிய வேறு சில விவரங்களையும் கேட்டதாகத் தெரிகிறது.

தமிழகம்.

பொள்ளாச்சி ராஜா மில் மெக்கானிக்கல் எஞ்சினீர் தங்களை முறைதப்பி நடத்தியதாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்.

ஃ ஃ

தரங்கம்பாடி துறைமுகத்தை மீண்டும் ஏற்றுமதி இறக்குமதி ஸ்தலமாகச் செய்யத்தக்க வழிகளைத் தேடுவதற்காக பிரபலஸ்தர்கள் அடங்கிய கமிட்டி ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது.

ஃ ஃ

சென்னையைச் சேர்ந்த சிந்தாதிரிப்பேட்டையில் ஒரு பெண் வெற்றிலையைச் சரியாகப் பார்க்காமல் வாயில் போட்டுக் கொண்டதால் இறக்க நேர்ந்ததாகச் சொல்லப்படுகிறது.

ஃ ஃ

சில தினங்கள் முன் மணியாச்சி ரயில்வே ஸ்டேஷனில் இரண்டு சாமான் ரயில்வண்டிகள் மோதிக்கொண்டதால் மூன்று சாமான் வண்டிகள் சாய்ந்துவிட்டன. இரண்டு இஞ்சின்களின் முன்பாகம் சேதப்பட்டிருக்கிறதாம்.

ஃ ஃ

சில தினங்கள் முன் திருவண்ணாமலை ரயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்த ஆதித்திராவிடச் சேரியில் தீப்பிடித்துக்கொண்டதால் சுமார் உ௫0 வீடுகள் எரிந்துபோயின. ஜனங்கள் மிகவும் பரிதாப நிலையிலிருக்கிறார்கள்.

ஃ ஃ

புதுக்கோட்டையில் போலீஸ் இலாகா தலைமையை இதுவரை திருச்சி ஜில்லா சூப்பிரின்டெண்டு வகித்துவந்த திட்டத்தை மாற்றி சமஸ்தானத்திலேயே போலீஸ் இலாகாவையும் ராணுவ இலாக்காவும் பார்க்க ஒரு உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டிருக்கி[illegible]

ஃ ஃ

திருப்பூருக்குச் சமீபத்தில் ஒரு கிராமத்திலுள்ள பெரியசாமிக் கவுண்டனுக்கு அவன் செய்த குற்றத்திற்காக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதை அறிந்த அவன் மனைவி தன்னுடைய மூன்று பிள்ளைகளுடன் கிணற்றில் விழுந்து உ[illegible] துறந்தாள்.

ஃ ஃ

சென்ற ஞாயிறன்று [illegible]த்தூரில் பகல் பனிரெண்டு மணிக்கும் [illegible] ௪இ- மணிக்கும் பூமி அதிர்ச்சி நே[illegible]ம். ஒவ்வொரு அதிர்ச்சியும் கூ நி[illegible]ரிருந்ததென்றும் வெடிக்குண்டு [illegible]ட்த்தாற்போலுள்ள சப்தம் கேட்டதென்றும் சொல்லப்படுகிறது.

ஃ ஃ

வட ஆற்காடுஜில்லா போளூர் [illegible]தாலூகா பெரிய மலைச்சாலில் தானியாறு [illegible]ட்டில் அக்கினி கற்களின் குவியல்களைக் கண்டு சென்ற இரண்டு வருஷ காலமாய் [illegible]ந்தியா அரசாங்க பூதத்துவ சாஸ்திர [illegible]புணர்கள் பரிசோதித்துப் பார்த்தி[illegible]சேஷ கந்தக மிருப்பதாகக் கண்டுபிடி[illegible]கிறார்கள்.

ஃ ஃ

சென்னை நகரத்திலே கட்டாய இலவச கல்வி ஏற்படுத்த வேண்டுமென்று சென்னை நகர சங்கத்தார் செய்த தீர்மானத்தை சர்க்கார் ஒப்புக்கொண்டு அவ்வாறே நடத்தும்படி உத்தரவு செய்திருக்கிறார்கள். அந்த உத்தரவுப்படி நாளிது ஜனவரி மாதம் க௫-ந் தேதி முதல் சென்னை நகரத்தின் க-முதல் உ௩-பாகங்களிலே இலவசக் கல்வி எல்லாச் சிறுவர் சிறுமிகளுக்கும் கட்டாயமாக போதிக்க ஏற்பாடு செய்யப்பட்டதென்று தெரிகிறது.

ஃ ஃ

கஅகூசு-ம் வருஷத்தில் ராமநாதபுரம் ராஜா பந்தகப்பத்திரம் எழுதிக்கொடுத்து எம். ஆர். எம். எ. சுப்பிரமணியன் செட்டியாரிடமிருந்து கடன் வாங்கியிருந்தார். இது சம்பந்தமாக இராமநாதபுரம் சப் கோர்ட்டில் ஸ்ரீமான் சுப்பிரமணியன் செட்டியார் பிராது கொடுத்து ரூ. ௩கக௩அ௫-க்கு டிக்கிரி பெற்றிருக்கிறார். இதன்பேரில் இராமநாதபுரம் ராஜா ககஅ-ல் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார். இந்த அப்பீல் மார்கழி மாதம் உ௬-ந் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நமது தபாற்பெட்டி

தேவகோட்டை.

மாணவர் சங்க ஆண்டு விழா :—இச்சங்கத்தின் எட்டாவது ஆண்டுவிழா, நாளிது தை மாதம் அ, கூ தேதிகளில் நடைபெறுமெனத் தெரிகிறது.

ஃ ஃ

மைடான் டில்லிக்கு மணியாடர்.

மைடான் தபால் தலைமை அதிகாரி ௩க—கஉ—உஎ-ல் எமக்குப் பின்வருமாறு தெரிவித்துள்ளார் :—

"ககூஉஅ-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து சிலோனுக்கும் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் மணியாடர் மூலம் பணம் அனுப்பலாமென்று தெரிவிப்பதுடன் இந்தியரனைவருக்கும் இவ்விடயத்தைத் தெரிவிப்பீர்களென்றும் நம்புகிறோம்."

இம் முறையானது நம்மவரனைவருக்கும் நன்மைபயக்குமென்பது குறிப்பிடத்தகுந்ததாகும் என்று கரு. மெ. சோமசுந்தரஞ் செட்டியார் எழுதுகிறார்.

ஃ ஃ

பனங்குடி.

ஸ்கூல் தருமம்:— தருமத்தில் சிறந்தது வித்தியா தருமமே. அள்ளிக் கொடுக்கக் குறையாத செல்வம் கல்விச்செல்வமன்றோ? நம்தாய்நாட்டில் நூற்றுக்குஎண்பத்தைந்து பேர் கல்விபெறாமலிருப்பதை நோக்கினால் வித்தியாதருமம் எவ்வளவு சிறந்ததென்று விளங்கும். சிவகங்கை தாலூகா பனங்குடி கிராமத்தில் ஸ்ரீமான் கா. பெரி. முத்தய்யா சேர்வையவர்கள் இத்தருமத்தின் அவசியத்தை உணர்ந்தும் ஊர் நன்மையை எண்ணியும் தமது சொந்தத்தில் ரூபாய் உ000 வரை செலவு செய்து ஸ்கூல் கட்டி அங்குள்ள பிள்ளைகள் இலவசமாகக் கல்வி கற்கும்படி செய்திருக்கிறார்கள். இதுபோல் ஸ்கூல் இல்லாத கிராமங்களிலுள்ள கனவான்கள் ஸ்கூல் ஏற்படுத்தி ஆண் பெண் பாலர்களைக் கல்வி கற்றுவரச் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் என்று மு. பெரி. நா. லட்சுமணன் செட்டியார் எழுதுகிறார்.

ஃ ஃ

அருப்புக்கோட்டை.

பிராம்மண அர்ச்சகரும் பிராமணரல்லாத பக்தர்களும் :— எ—க—உஅ-ஆகிய சனிக்கிழமை திருவாதிரை யன்று இவ்வூரிலுள்ள சொக்கநாதர் ஆலயத்துக்குப் பக்தகோடிகள் சுவாமி தரிசனத்துக்காகச் சென்றார்கள். சிலர் கையில்தேங்காய்பழத்துடன் ஆலயம் செல்வதும், ஏழைகளாக இருக்கப்பட்டவர்கள் வெறும் கற்பூரமும், இன்னும் சிலர் வெறும் தரிசனம் மாத்திரம் செய்யவும் செல்வது வழக்கம். வருடா வருடம் திருவாதிரையன்று இவ்விதம் நடப்பது சகஜமாக இருந்து வருகிறது.

எ—க—உஅ-ல் சில பிராமணரல்லாத பக்தர்கள் தேங்காய் பழத்துடன் சென்று நடராஜர் சந்நிதியில் பிராமணரல்லாதாருக்கென ஏற்பட்டிருக்கும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். அப்பொழுது கோயிலில் கூட்டமும்அதிகமாக இருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட பக்தர்கள் ஆலயம் சேர்ந்தவுடன் கோயில் அர்ச்சகர் அவர்களை அணுகி தேங்காய் பழங்களையும், ஒரு தேங்காய் உடைக்க அரை அணா வீதம் உரிய தக்ஷிணையையும் தன்னிடம் கொடுக்கும்படி சொன்னார், 'காயின் விலை கூ பைசா க0 பைசாவாக இருக்கிறது. உடை கூலி அரை அணா கேட்கிறீர்களே. இது நியாயமா? பஞ்ச காலத்தில் காய் பழம் முதலியவைகளை வாங்குவதே கஷ்டமாக இருக்கிறது. சுவாமி கோயிலுக்கும் குழந்தைகள் உள்ள இடத்துக்கும் வெறும் கையாகப் போகக்கூடாது எனும் ஆன்றோர் வாக்குக்கிணங்க காய் வாங்கிக்கொண்டு வர நீங்கள் இப்படிப் பணம் கேட்கிறீர்களே. அப்படி [illegible] முடியாது' என்று சொல்லவே, மேற்படி அர்ச்சகர் தான் காய்களை [illegible] முடியாது என்று சொல்லிவிட்[illegible]. ஆகவே, மேற்படி பக்தர்கள் சற்று[illegible]த்திருந்து பக்தி மேலீட்டினால் தெய்[illegible]ட்ட வழி விடட்டும் என்று நினைத்[illegible]ங்கள் கொண்டு சென்றிருந்த காய்[illegible]ங்களை உடைத்து வைத்து கற்[illegible]தனையும் பண்ணினார்கள். இதைப் [illegible] கொண்டிருந்த மேற்படி அர்ச்ச[illegible]டைய குடி முழுகிப் போனதாக

[illegible]-ம் பக்கம் பார்க்க.)

அடிகளின் உண்மை வாழ்வு.

பகுதி ச.

அத்தியாயம் ௩ச.

ஆன்மப் பயிற்சி.

மாணவர் ஆன்மப் பயிற்சி, உடல், உளப் பயிற்சியினும் மிகவும் கடினமானது. நான் ஆன்மப் பயிற்சிக்கென நூல்கள் ஒன்றையும் எதிர்பார்த்திருக்கவில்லை. எனினும், ஒவ்வொரு மாணவனும் தனது சமயத்தின் மூலாதார அமைப்புக்களை யுணர்ந்து, சமய நூற்களின் பொது அறிவு பெற்றிருத்தல் வேண்டுமென்று நான் எண்ணினேன். அதற்கு, என்னால் இயன்ற வசதிகளும் செய்திருந்தேன். ஆனால், அது மனப்பயிற்சியின் ஓர் பிரிவாகவே யான் கொண்டிருந்தேன். நான் டால்ஸ்டாய் பண்ணையில் இளைஞர்களைக் கல்வி கற்பிக்கும் பொறுப்பு ஏற்கும் முன்னர், ஆன்மப்பயிற்சி ஒப்பற்ற உயர் செயல் என்பதை நன்கு உணர்ந்திலேன். ஆன்ம வளர்ச்சியானது, நற்குணம் அளித்து, இறைவழி பற்றிடவும் தன்னை யுணர்ந்திடவும் செய்கின்றது.

இளைஞரது பயிற்சிகளுள், இஃதே தலையாயது என்பதும், ஆன்ம ஞானமின்றிய ஏனைய பயிற்சிகள் பயனுடையவை அன்றெனவும், சிலகால் தீமை பயக்கத்தக்கதெனவும் யான் அறிந்திலேன்.

தன்னை உணர்தல், நான்காவது ஆசிரமமாகிய சந்நியாச ஆசிரமத்திலேயே, அடைதற்குரியதென்ற மூட நம்பிக்கை இருப்பது யான் அறிந்ததே. ஆனால், இத்தலையாய அனுபவம், தமது வாழ்க்கையின் கடைக் காலத்திலேயே பெறுதற்குரியதென்று எண்ணியவர், அந்திப் பொழுதில் தன்னுணர்வு பெறுவதில்லை என்பதும், பரிதபிக்கத் தக்க, குழந்தைப் பருவத்திற்கொப்பான முதுமையையே அடைந்து பூமிக்குப் பாரமாக நிற்கின்றார் என்பதும் கண்கூடானதே. இதே கொள்கையை, ககககக—கஉ வருடத்தில் கலவி கற்பிக்கும் போதே யான் கொண்டுள்ளேன் என்பது என் ஞாபகத்திலிருக்கிறது. எனினும் இதே மொழிகளால் அவற்றை அக்காலத்து மொழிந்திடாதிருக்கலாம்.

அங்ஙனமாக, இவ்வான்மப் பயிற்சியை அளிப்பதெங்ஙனம்? பல பாக்களை இளைஞர்கள் மனனம் செய்து ஒப்புவிக்கச் செய்தேன். அறிவுப் பயிற்சி பொருள்பற்றிய நூல்களை அவர்கட்கு படித்துக்காட்டினேன். ஆனால் அவை எனக்கு முழு திருப்தி அளிக்கவில்லை. அவரோடு இன்னும் நெருங்கிப் பழகியபோது புத்தக வாயிலாக ஆன்ம வளர்ச்சி அளித்தல் இயலாததென்பது நன்கு அறிந்துகொண்டேன். உடல்வளர்ச்சி உடற் பயிற்சியாலும், அறிவு விருத்தி அறிவுப்பயிற்சியாலும் வருவது போன்று ஆன்ம வளர்ச்சியும் ஆன்மப் பயிற்சியாலேயே பெறவேண்டியதிருக்கிறது. ஆன்மப் பயிற்சியோ எனின் அது ஆசிரியரின வாழ்க்கையையும் குணத்தையையும் முற்றும் சார்ந்திருக்கின்றது. தாம், சிறுவரிடையே இருப்பினும், இல்லாதிருப்பினும் ஆசிரியர் தமது செயல், சொல் ஒவ்வொன்றிலும் மிகக் கவ[illegible] செலுத்திடவேண்டும். பல மைல்களுக்கப்பாலிருப்பினும் ஓர் ஆசிரியருக்கு தனது வாழ்க்கை நெறியால், மாணவர் உயிர் சக்தியை மாற்றிட இயலும். நான் ஒரு பொய்யனெனில், என் குழந்தைகளை உண்மையுரைக்கக் கூறுவது வெறும் பேச்சளவாகவே முடியும். கோழையாகிய ஓர்ஆசானுக்கு தன் சீடர்களைவலிமையுடையோராக்க இயலாது; தன்னடக்கமில்லாதவருக்கு புலனடக்கத்தின் மாண்பை புகட்டிட முடியாது; ஆகவே, என்னுடை உறைந்திடும் சிறுவர், சிறுமிகட்கு யானே ஒரு வழிகாட்டியாக இருத்தல் வேண்டும் என்பதைக் கண்டுகொண்டேன். இவ்வாறு அவர்கள் ஆசிரியர்களாகினர், யானும் அவர்கட்காவேனும், நன்னெறியுடன், நேர்மைய வழியில் வாழ்ந்திடப் பயின்று கொண்டேன். டால்ஸ்டாய் பண்ணையில் வரவரப் பெரும் ஒழுக்கமுடனும் என்னை யான் செய்துகொண்டதற்கு பெருங் காரணமாகயிருந்தவர் எம்பால் சேர்ப்பிக்கப்பட்ட அவ்விளைஞர்களே யாவர்.

அவர்களுள் ஒருவன் முரட்டுத்தனத்தினன், சொல்லுக்கடங்காதவன், எப்போதும் சண்டையிடும் இயல்பினன். ஒருக்கால், அவன் கட்டுக்கடங்காதவினன். ஆதலால், யானும் அடக்கவொணா ஆத்திரங்கொண்டேன். என் குழந்தைகளை இதுவரை யான் தண்டித்ததில்லை. ஆனால், இத்தருணம் எனக்குப் பெரும் சீற்றம் உண்டானது. அவனுக்குப் போதனை செய்ய முயன்றேன். ஆனால் அவன் பெரும்பிடி வாதக்காரனாக இருந்தான்; என்னை ஏமாற்றிடவும் முயன்றான். எனவே, நான் பக்கத்திலிருந்த ஓர் ரூல் தடியை எடுத்து அவன் கையில அடித்தேன். அடிக்கும்போது என் கை நடுக்க முற்றது. இதை அவனும் கவனித்தான் என்றே எண்ணுகிறேன். அவர் அனைவற்கும, இது முற்றுமே ஓர் புதிய அனுபவமாகயிருந்தது. அவ்விளைஞன் அழுதுகொண்டு தன்னை மன்னிக்க வேண்டினன். அவன் அழுதது அடியின் வலியாலன்று. பதினேழு பிராயத்தைய வலிமை வாய்ந்த வாலிபனாக யிருந்தமையின், அவன் விரும்பினால் என்னை பதிலுக்குப்பதில்அடித்திருக்கலாம். ஆனால் எனக்கு இக்கொடிய முறையை கையாள வேண்டியதால் நேர்ந்த மனவருத்தத்தை அவன் உணர்ந்துகொண்டான். இதன் பின்னர், அவன் ஒருபொழுதேனும், பணியாது நடந்துகொள்ளவில்லை. ஆனால் அப்பலாத்காரச் செயலுக்கு நான் இன்னும் வருந்துகிறேன். அக்கால், அவன் முன்னர் எனது மிருகத்தன்மையைக்காட்டினேனேயன்றி, உயர் உயிர்த்தன்மையைக் காட்டிடவில்லை என்பதனை அஞ்சுகின்றேன்.

என்றும் நான் தேகதண்டனை செய்வதை எதிர்த்து வருபவன். எனது மைந்தருள் ஒருவனை ஒருதடவை தண்டித்தது எனது ஞாபகத்தி லிருக்கிறது. ஆனால், ரூலத்தடியைக் கையாண்டது சரியா, தவறு என்பதை முடிவுசெய்யஎனக்குஇன்றுவரை இயலவில்லை. சீற்றத்தாலும், கண்டிக்க வேண்டுமென்ற ஆத்திரத்தாலும் அண்டப்பெற்றதால் அது தவறுகளே யிருக்கலாம். எனது, துயரின் வெளித்தோற்றமாக மட்டுமே யிருப்பின், அதை ஒழுங்கானதென்று கருதியிருப்பேன். ஆனால் அதன் நோக்கம் கலப்புற்றதாகவே யிருந்தது. இச்சம்பவம் என்னைச் சிந்திக்கத் தூண்டியதோடு, மாணவர்களை சீர்திருத்தஓர்நல்முறையை யுகைத்தது. ஆனால் அத்தருணத்தில் இம்முறை எம மட்டு பயனளித்திருக்குமென்பது எனக்கு விளங்கவில்லை. அவ்விளைஞன் அவ்விஷயத்தை சீக்கிரம் மறந்துவிட்டான், அவன்பெரிதும சீர்திருந்தியதாகவும் தோன்றவில்லை. ஆனால், இச்சம்பவம் ஓர் ஆசிரியனுக்கு தன் மாணவர் பாலுள்ள கடமையை நன்கு விளக்கிற்று. இதன் பின்னர் மாணவர்களிடையே பல ஒழுங்குதவறு செய்கைகள் நடந்தன. எனினும அவர் தண்டிக்க யான் முயலவில்லை. இச்[illegible] சிறுவர்கட்கும் சிறுமிகட்கும் ஆன்[illegible] பயில்விக்க முயன்றதில் ஆன்ம[illegible]யின் வன்மையை நான் நன்கு [illegible] கொண்டேன்.

நமது தபாற்பெட்டி

(க-ம் பக்கத் தொடர்ச்சி.)

எண்ணிக் கண்டபடி சத்தமிட்டு "கோயில் போச்சு, சுவாமி போச்சு, காலங்கெட்டது, மேல் கீழ் இல்லை" என்று கதறினார். அல்லாமலும் 'இப்படி யாரையா உங்களைச் செய்யச் சொன்னார்கள்? பாருங்கள் உங்கள் பேரில் பழியைப் போட்டுவிடுகிறேன்' என்றும் சொன்னார். உடனே காய் உடைத்த பக்தர்கள் 'பழி போடவேண்டிய காரியம் என்னய்யா யிருக்கிறது. வரம்பு மிஞ்சிய காரியம் இதில் நாம் ஒன்றும் செய்யவில்லையே. நமக்கெனக் குறிப்பிட்டிருக்கும் ஸ்தானத்திலிருந்து நாம் காய்களை உடைக்கக் கூடாதெனவும் ஒரு விதக் கட்டுப்பாடும் இல்லையே. அப்படியிருக்க நீங்கள் ஏனய்யா ஆத்திரப்பட வேண்டும்' என்று சமாதானம் சொல்லி விட்டுத் தங்கள் வீடுகளுக்குப் போய்விட்டனர். பின் கோயில் அர்ச்சகரும், கோயில் ரிஸீவராக இருக்கப்பட்ட ஒரு பிராமணரும், இன்னும் உடன் பிறந்தாரைக் காட்டிக்கொடுக்கும் சில பிராமணரல்லாத முடத் தெங்குகளும் கூடி மேற்படி பக்தர்களை எப்படியும் அடக்கிவிட வேண்டுமென்னும் எண்ணத்துடன் ஆலோசித்தார்கள் போலும். ஆனால் உண்மையாக நடந்தவற்றைக் கவனித்தால் மேற்படி பக்தர்களை ஒன்றும் செய்ய முடியாது என்று தெரிந்து கீழ் வருமாறு ஒரு சிருஷ்டியைக் கேள் உண்டுபண்ணி ஸ்தல சப் மாஜிஸ்டிரேட் அவர்களிடம் தாக்கல் பண்ணியிருப்பதாகக் கேள்வி. ஆனால் உண்மை எம்மட்டோ? கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

கேஸின் சாரமாவது:— மேற்படி பக்தர்கள் கர்ப்பகிருகத்துக்குள் ஆக்கிரமித்துச் சென்று தேங்காய் உடைத்து சுவாமிக்குத் தாங்களே மாலை சாற்றி கற்பூர தீபங்காட்டி சுவாமியை அசுசிப்படுத்திவிட்டார்கள். அதனால் கும்பாபிஷேகம் நடத்தாமல் மற்றக் காரியங்கள் இனிமேல் நடத்த முடியாது. ஷை குற்றத்திற்காக ஷை பக்தர்களை சிட்சிக்க வேண்டும்.

கடவுளின் சன்னிதானத்திலிருந்து அவருக்குத் தொண்டூழியம் பண்ணி ஆலயத்தைப் புனிதமாக்கி அருள் சுரந்து நிற்கச் செய்வதற்கென்று ஏற்படுத்தப்பட்டவர்களே இப்படிப்பட்ட பொய்யும் புளுகும் சொல்ல ஆரம்பித்தால்பின் அக்கோயிலில் அருள் எவ்வளவு நிறைந்திருக்கும் என்ற கேள்வி பிறக்கிறது. இனி ஒரு முக்கியபிரச்னையைப்பற்றி இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது. கோவிலில் பட்டர் ஒருவரை நியமித்துக் கொண்டு காமாகக் காய் உடைத்துக்கொள்வதென்றால் என்ன அர்த்தமென்கிறார்கள். கோவிலில் நித்திய பூஜை நடைபெற்று வருவதே பட்டர்களை ஏற்படுத்தியதின் நோக்கம். அதற்காக அவர்களுக்குக் கோவில் சொத்திலிருந்து சம்பளமோ, மானியமோ கொடுக்கப்பட்டு வருகிறது. அல்லாமலும் தளிகைச் சாதம், புளியோதரை, தோசை முதலானவைகளும் ஏராளமாகக் கிடைக்கின்றன. இதுவே அவர்களுடைய சேவைக்குப் போதுமான வைபமாகும்.

ஆனால் தேங்காய் உடைக்கும் வழக்கம் [illegible] அனுமத்து. மேலமுட்டை உடைப்பதற்காக கொடுக்கும்கூலி இஷ்டமுள்ளவர்கள் பணக்காரர்கள் கொடுத்[illegible]கலாம். அதைத் தடுப்பார் யாரு[illegible] [illegible]லாதவர்களும் கூலி [illegible] உடைக்கவேண்டும் [illegible]

ரயில்வே ஸ்[illegible] [illegible]ர் சிறு [illegible]
டியையும் [illegible]லி ஒரு அணா
இரண்டு [illegible] கொடுக்கிறார்
கள். [illegible]லாதவர்களிடம்
வந்த [illegible]ர்ட்மெண்டாரால்
ஏற் [illegible]ர்கள்; ஆதலால் காய்
க[illegible]யைச் தூக்கிச்செல்லு
[illegible] கூலியைக் கொடுக்கத்
[illegible]ன்றால் யார்தான் கொடுப்

[illegible] உலக [illegible]
[illegible]ாமண [illegible]
முறையில் [illegible]
பிராமணரல்லா[illegible]
விடிவுகாலம் [illegible]
வெளிச்சம்.

உள்ளுறை.

நாளென் செயும்! வினைதானென்
செயும்! எனைநாடி வந்த
கோளென் செயும்! கொடுங்கூற்
றென் செயும்! குமரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் ஷண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்
னேவந்து தோன்றிடினே.

—கந்தரலங்காரம்.

குமரன், காரைக்குடி.
பிரபவ - ஸு தை - மூ கூ - உ

பகிஷ்காரம்.

சென்னை... கூடிய காங்கிரஸ் திருவி... ...மிஷனையும் பிரிட்டிஷ் சாமான்க... ...கிஷ்கரிக்க வேண்டு மென்று ...க்கப்பட்டிருப்பது யாவருக்கு... விஷயம். காங் கிரஸ் கூட்ட... ...ன்ஸ் கூட் டங்களும், ...ளுக்குள் கிளர்ச்சியை அங் தக் கிளர்ச்சி... ...மை களைப் பெறவும், ...நக் கின்றன. இக்கூட்ட... ...வ தைப் போலவாவது, ... தாங்கியாவது நடப்போ... கொ...ந் தீர்மானங்களைப் ... ...ஷில்லாமல், வழு... ...ரிக்கத் தக்கதாகு... ...மடையில் ஒரு ... ஒரு வேடமுங் ...ாதுஜனங்களை ...ில் செய்யப் பட்டுள்ள கமிஷன் பகிஷ்காரத் தீர்மானம், எந்த முறையில் நடைபெறப் போகிறதென்பதற்கு அறிகுறிகள் தோன்றிவிட்டன. விசாரணை நடந்ததாகப் பேர்பண்ணுவதற்குச் சிலர் முன்வரத்தான் போகின்றனர். இவர்கள் சூழ்ச்சித் திறமையில்லாதவர்கள் ஆவர். அரசாங்க அடிமைகள், தேசத் துரோகிகள், காட்டிக்கொடுப்பவர்கள் என்னும் வசைமொழிகளை, அரசியல் பித்தலாட்டக்காரர்களிடமிருந்து பெறப்போகிறார்கள். கமிஷன் பகிஷ்காரத் தீர்மானம் படாடோபத்துடன் காங்கிரஸ் மேடைக்கு வரும்பொழுதே சூழ்ச்சிவல்லுநரான பார்ப்பனத் தலைவர்களும் பிறரும் தாங்கள் கமிஷன் முன் சென்று எதைச் சொல்லக் கூடுமோ— எந்த முறையில் திட்டம் அமைக்கப்பட்டால் தங்கட்கு வெற்றி கிடைக்குமோ அந்த வகையில் திட்டங்கள் தயாரித்து அச்சிட்டு உலகெங்கணும் பரப்பிவிட்டனர். அத்திட்டங்களில் சூழ்ச்சியறியாத பொதுஜனங்களை ஏமாற்றற்பொருட்டுச் செய்யப்பட்டிருக்கும் ஆரவாரங்களைக் கண்டு மகிழ்ச்சியடைந்து பலர் ஏமாறிப் போவது இயல்பு. சைமன் கமிஷனானது இங்குவந்து விசாரணை நடத்தி முடிவு கூறும்போது, இப்போது வெளியிடப்பட்டிருக்கும் தலைவர்களின் அறிக்கைகள் செய்யப்போகும் வேலை வெளியாகும். பொதுஜனங்களின் அபிமானத்தைப் பெறுவதன் பொருட்டுக் காணப்படும் பகுதிகள் பயனளிக்கப்போவது குதிரைக் கொம்பேயாகும். ஏனைச் சுயநலப்பகுதிகள் கட்டாயம் பயனளிக்க வே போகின்றன.

கமிஷன் வரும் இந்தச் சமயத்தில்—ஒலியும் எதிரொலியுமாகப் பகிஷ்கார முழக்கம குமுறி எழும்படி செய்யப்படுஞ் சந்தர்ப்பத்தில், திட்டங்கள் எழுதித் தலைவர்கள் வெளியிடமுன் வந்ததின் நோக்கமென்னை? இச்செயலுக்கு மோசம், ஏமாற்றம்என்னும்பெயரைச் சூட்டநாம் விரும்புகிறோம்.

பிரிட்டிஷ் சாமான் விலக்கு என்னும் இன்னொரு பகிஷ்காரத்தை நோக்கலாம். சென்னைக் காங்கிரஸ் கொட்டகையில் இத்தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது. அதன் பக்கத்திலேயே அகில இந்தியப் பொருட்காட்சி யென்னும் பெயரோடு, ஒருகண்காட்சி காட்டப் பெற்றது. உண்மை இந்திய உள்ளம் பெற்ற ஒருவன், அக்காட்சியைக் கண்டால் சகிக்க மாட்டான், அங்கு வைக்கப் பெற்றிருந்த எண்ணற்ற இயந்திரங்களும், பீங்கான், எனுமல், துணி முதலிய எண்ண முடியாத—எழுத முடியாத பிரிட்டிஷ் பொருள்களும் குவிக்கப்பட்டிருந்தன. இந்தியாவில் இரத்தக் கண்ணீர் விட்டு வளர்க்கப் பெறும் ஒவ்வொரு தொழிலையும், அடியோடு நாசஞ் செய்வதற்கு அங்கு வைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு இயந்திரமும் போதியதாகும்.

இப்பொழுது காந்தியடிகளால் ...ந்துயிர் பெற்றெழுந்திருக்கும் கதர் ...க்கத்தினால் சுதேசிய ஆடைத் ...ில் பரிசுத்தமாக வளர்ந்து வரு ...தன்பது உலகமறியும். இதனை அ...ப்பதற்கும் வழி கோலிய சென்னை... ...வர்கள், பகிஷ்கார ஆர்ப்பாட்டஞ் செய்ய முன் வருமுன் பொருள் ஆழ்ந்து யோஜிக்கத் தக்கதாகும். அகில இந்தியப் பொருட் காட்சியில் போடப் பெற்றிருந்த இரண்டு விளம்பரங்களை இங்கே குறிப்பிடுகிறோம்.

> "சர்க்கா நூல் ஊடுக்கும், மில் நூல் பாவுக்கும் ஆகட்டும். இச் சேர்க்கையில்தான் நமது கதி மோக்ஷமுறும்."
>
> "சேணியனைக் கைநூல் பாவில் நெய்யச் சொல்வது, பேனுக் கத்தியால் யுத்தஞ் செய்யச் சொல்வதை யொக்கும்."

இம்மாதிரியான விளம்பரங்களால் கதர் அபிவிருத்திக்கு எவ்வளவு சாதக மேற்பட்டிருக்குமென்பதை நாம் கூற வேண்டியதில்லை. பொது ஜனங்களிடம் பகிஷ்கார ஆர்ப்பாட்டஞ் செய்வதும், மறுபுறந்திரும்பி அவைகளைகொலை புரிவதும் சென்னை அரசியல் தலைவர் சிலருக்கு இயல்பாகிவிட்டன. இக் கூக்குரலை நம்பி ஏனைய தலைவர்களும் பொது ஜனங்களும் ஏமாந்து போக வேண்டாமென எச்சரிக்கை செய்கிறோம்.

எண்டிசைக்காட்சி.

பெருந்தன்மை.

உலகிலுள்ள எல்லா கிறிஸ்துவ சமூகத்தவருக்கும் ஒரு பெருங் குருவாக விளங்கும் மத குரு ரோம் நகரில் வதிகின்றார். அவரைக் காணச் செல்லும் முடிமன்னர்களும், பேரறிஞர்களும் மண்டியிட்டு அவருடைய காத்தை முத்தமிடவேண்டும். இது பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வருங் கட்டாய வழக்கமாக விருந்து வருகிறது. ஆனால் சமீபத்தில் அங்கு சென்ற ஆப்கன் அமீர் அமனுல்லாகான் மண்டியிட்டு முத்தமிட வில்லை யென்று தெரிகிறது. அமீர் ஒரு முகமதியர். முகமதிய மதத்தைச் சேர்ந்த ஒருவர், அந்நிய மத குருவை மண்டியிட்டு வழிபடுதல் முறையன்றென்று அமீர் கருதினார் போலும்! கிறிஸ்துவ உலக குருவின் முன்னிலையில் பின்வாங்காது நிமிர்ந்து நின்ற அமீரின் சுயமரியாதையைப் போற்றுகிறோம். அதே உலக குருவின் அறையினுள் ஆப்கன் தேசத்துத் தேசிய கீதமும் பாடப்பட்டதாம். அக்கீதம் அல்லாவைப் பிரார்த்தித்துத் துதிக்கும் மகமதிய கீதயாகும். இக்கீதத்தை அந்த அறையினுள் ஓதுதற்கு இடங்கொடுத்த பாதிரியாரின் பெருந்தன்மையைப் போற்றுதிருக்க முடியுமா?

கதை கட்டுகின்றனர்.

உலகெங்கும் புகழ்பெற்று விளங்கும் கவியரசரான ரவீந்திரநாத தாகூரின் குடும்பத்தைப்பற்றி வெளிநாடுகளில் ஒரு கதை கட்டப்படுகிறதாம். அதாவது அவருடைய முன்னோர்கள் போர்ச்சுகல் ரத்த சம்பந்தப்பட்டவர்களாயிருககவேண்டும் என்பதாகும். இம்மாதிரி கதை யேன் கட்டப்படுகிறதென்பது யாவரு மறிந்ததே யாகும். இந்தியன் ஒருவன் இவ்வளவு பேரறிஞனாக விருப்பதை அவர்களால் மனமார ஒப்புக்கொள்ள முடியவில்லை. ஆனால் கவிதாகூரைக் குறைத்துக் கூறவும் இயலவில்லை. எனவே ஐரோப்பிய ரத்தக் கலப்பிருக்க வேண்டுமென்று கூற முன் வந்திருக்கின்றனர் போலும். இம்மாதிரியான போக்கிரித் தனமான சொற்களை இவர்கள் தாம் கூற முன் வந்திருப்பதாக நினைக்க வேண்டாம். நந்தமிழ்ப் பேரறிஞர்கள் பலர் அறிவில் பெருமை யடைந்ததற்காக அவர்கள் பிராமணருக்குப் பிறந்திருக்க வேண்டுமென்று நெடுங்காலத்திற்கு முன்னரே கதை கட்டப்பட்டிருக்கிறது. உதாரணமாக கபிலர், திருவள்ளுவர், ஒளவையார், கம்பர் போன்ற பலரைக் குறிப்பிடலாம். அறிவு யாவருக்கும் பொது. அதனை அடைந்தவர் யாவராயினும் எக்குலத்தாராயினும் மனமாரப் போற்றுவதே நேர்மையாகும். அவ்வாறன்றி அறிவு பெற்று மேன்மையுறுவாரனைவரும் குறிப்பிட்டகுழுவின் சம்பந்தம் பெற்றவரென்றுகூறுதல் அறியாமையும் குறும்புமாகுமன்றி வேறன்று.

தந்திச்செய்தி.

பினாங்கு தை-மீ ருஉ

உண்டியல் விலை	நூற்று ஐம்பத்து நான்கு.
ஈயம் விலை	நூற்று இருபத்து நான்கு.
ரப்பர் விலை	எண்பத்தொன்பது.

இரங்கூன் தை-மீ ருஉ

தவணை வட்டி	0-கஉ-சு
பழய பவுன்	கங-க0-0
புதிய பவுன்	கங-அ-0
படகு நெல்	கஎஎ-அ-0
ரயில் நெல்	கஎ0-0-0
ஸ்பெஷல் அரிசி	சஉரு-0-0
மில்சார் அரிசி புளுங்கல்	ரு00-கரு-0
நசேன் அரிசி	சஙரு-0-0
சிறிய மில் அரிசி	சங0, சஙரு-0-0
பெரிய மில் அரிசி	சஉ0-0-0
ஏ ஒன் குருணை	சக0-0-0
மொச்சை	ருகூரு-0-0
தட்டைப்பயறு	ஙகூரு-0-0
உளுந்து	சகூரு-0-0
சிவப்பு பீன்ஸ்	உச0-0-0
வெள்ளை பீன்ஸ்	உசரு-0-0
மிளகாய்	சு0-0-0
பருத்திவிதை	கூ-அ-0
வெங்காயம்	சஉ-0-0
எள்ளு	சு0-0-0

கப்பற் செய்தி.

'எதியோப்பியா'க் கப்பல் நாளிது தை மாதம் எ-ம் நாள் வெள்ளிக்கிழமையன்று சென்னையிலிருந்து இரங்கூனுக்குப் புறப்படுகிறது.

'டைரியா'க் கப்பல் நாளிது தை மாதம் அ-ம் நாள் சனிக்கிழமையன்று நாகப்பட்டணத்திலிருந்து மலாய் நாட்டிற்குப் புறப்படுகிறது.

"ரோஸினு"க் கப்பல் நாளிது தை மாதம கூ-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை யன்று நாகபட்டினத்தி லிருந்து மலாய் நாட்டிற்குப் புறப்படுகிறது.

"புதிய பெட்ரோல்"

லண்டனில் "எதில்" என்ற ... மோட்டார்எண்ணெய், 'பெட்ரோ குப்' பதிலாக உபயோகித்தலை ஆராய. ரு00 மைல் தூரத்துக் நல்ல சுத்தஞ் செய்யப்பட்ட டாரை அந்த எண்ணெயை ... டிப் பரிசோதித்துப் பார்... டாகி வருகிறது.

கடிதங்கள்.

மதுரை.
(நமது நிருபரிடமிருந்து)

கூட்டம்:—தென்னிந்தியநலவுரிமைக் கூட்டுறவுச் சங்கத்தின் ஜெனரல்பாடி மீட்டிங் இம்மாதம் உஉ-ம் நாள் தலைவர் திரு. எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் இல்லத்தின்கண் நடைபெறும். அது காலை ககூஉஅம் ஸுத்தில் நடைபெறவேண்டிய முக்கியமான வேலைகளைக் குறித்துப் பலர் பேசுவார்கள்.

குத்துண்டார்:—தென்னிந்திய ரெயில்வேக் கம்பெனியின் டிக்கட்டு பரிசோதகர், ஒரு மலையாளியால் கரு—அ—உஅ மதுரை ஜங்க்ஷனில் கத்தியால் குத்தப்பட்டதாகத் தெரிகிறது. காரணம்டிக்கட்டுஇல்லாததால் வந்த வினையென்று சொல்லப்படுகிறது.

எலேக்ஷன்:— ஹிந்து சாஸ்வத நிதி லிமிடெட் (பண்டாபீஸ்)டைரெக்டர்களில் நால்வர் ஸ்தானம் காலியாயிருப்பதை பூர்த்தி செய்யும்பொருட்டு கரு-க-உஅ தேதி எலெக்ஷன் நடைபெற்றது. மேல்க்கண்ட நான்கு ஸ்தானங்களுக்கு ச பிராமணர்களும் ங பிராமணரல்லாதார்களும் அபேக்ஷகர்களாக நின்றதில் அடியில்கண்ட நபர்கள் அதிகப்படியான ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறாகள்.

திருவாளர்கள் ராவ்சாகிப் எம். அப்பாய் நாயுடுகாரு, சிதம்பரம் செட்டியார், மணி அய்யர், எ. வேதாரமய்யர்.

இரங்கூன்.

நிகழும் பிரபவ ஆண்டு தைத் திங்கள் உங, உச-ம் நாள் (5-2-28, 6-2-28) ஞாயிறு திங்கட் கிழமைகளில் தேவகோட்டை திருவாளர் அ. வெ. தியாகராஜா அவர்கள் தலைமையில் திருமிகு. சிதம்பர ரெட்டியாரவர்கள் உயர்தரப் பள்ளிக்கூடத்தில் தனவணிக வாலிபர் மகாநாடு நடைபெறும்.

அஞ்ஞான்று தனவணிக அன்பர்களனைவரும் விஜயஞ் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம், என தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கத்தார் எழுதுகிறார்கள்.

மதுரையில் பார்ப்பனரல்லாத இளைஞர் மகாநாடு.

மதுரை இராமனுதபுரம் ஜில்லா பார்ப்பனரல்லாதார் இளைஞர் முதல் மகாநாட்டை மதுரையில் மே மாஸத்தில் நடத்துவதாக இச் சங்கம் தீர்மானித்திருக்கிறது. மதுரை இராமனுதபுரம் ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு சங்கங்களும் தம் அபிப்பிராயத்தை பிப்ரவரி மாஸம் 1-ம் தேதிக்குள் மதுரை பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கக் காரியதரிசிக்குத்தெரியப்படுத்தவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கே. இராமசாமி,
செக்ரட்டரி
பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம்.
38/39 மணி நகரம், மதுரை.

ராயல் கமிஷன்

லண்டனிலிருந்து நேற்றுப்புறப்பட்டிருக்க வேண்டும். பிப்ரவரிமீ ஙஉ பம்பாய்க்கு வந்து சேரும்.

குமரன் ஆண்டுமடல்.

இரண்டாவது வருடம்.

குமரன் ஆண்டு மடலானது முதன் முதல் இவ்வருட ஆரம்பத்தில் வெளியிடப் பெற்றது. அதில் வெளியிடப் பெற்ற அருமை பெருமைகளைப் பாராட்டி, ஏற்றிப் போற்றிப் புகழாதவர்கள் யாருமில்லை. அடுத்து வரும் சித்திரை மாதத்தில் ஆண்டு மடல் வெளியிடுவதற்கான திறமையான ஏற்பாடுகள் செய்யப் பெறுகின்றன. தமிழ் நாட்டிலுள்ள தலைவர்கள், தேசாபிமானிகள், அறிஞர்களின் சிறந்த கட்டுரைகள், ராஜீய சமூக விஷயங்களை விளக்கிக் காட்டும் விநோதப் படங்கள், சித்திரப் படங்கள், சிறு கதைகள், விநோதக் குறிப்புகள், சிறு நாடகங்கள் முதலியவை அடங்கியதாய் உயர்ந்த காகிதத்தில் அச்சிடப் பெறும்.

விலை விவரம்.

சந்தாதார்கட்கு	...	ரூ. க—0—0.
மற்றவர்க்கு	...	,, க—ச—0.

தபாற் செலவு வேறு.

குறிப்பு:—பிரபவ வருஷம் பங்குனி மாதம் ங0-ந் தேதிக்குள் ஆபீசுக்குப் பணம் வந்து சேரும்படி அனுப்புவோர்க்குத் தபாற்கூலி இனும். ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் இரண்டணு அதிகமாக அனுப்புதல் வேண்டும். மொத்தமாக வாங்கி வியாபாரஞ்செய்ய விரும்புவோர் மாசி மாதம் ங0-ந் தேதிக்குள் தெரிவிக்கவேண்டும். க00-க்கு உ0 கமிஷன் கொடுக்கப்பெறும்.

விளம்பரங்கள்.

விளம்பரங்களுக்காக சொற்ப பக்கங்களே ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதால நமது வியாபார நண்பர்கள் தங்கள் விளம்பரங்களை முன் பணத்துடன் தாமதியாது அனுப்புவது நலம். எமது "குமரன் ஆண்டு மடல்" இதுவரை வெளி வந்துள்ள எந்தத்தமிழ் ஆண்டு மடலையுமவிட எத்தனையோ மடங்கு அதிகமாக, வியாபாரச் செய்திகளுடனும், படங்களுடனும், அறிஞர்களின் பல அரிய கட்டுரைகளுடனும் மிளிர்ந்திலங்குமாகையால் ஒவ்வொரு தமிழர் கையிலும் இந்தியா, பர்மா, இலங்கை, மலாய்நாடுகள், சயாம், சைனு, பிஜித் தீவுகள், தென் ஆபிரிக்கா முதலிய இடங்களில் அது இருக்குமென்பது நிச்சயம். ஆகையால் நமது வர்த்தக மித்திரர்களுக்கு தங்கள் சரக்குகளை உலகில் நாற்பக்கமும் விளம்பரப்படுத்த இதை விட நல்ல சந்தர்ப்பம் வாய்ப்பதரிது. இந்த உண்மையை தற்சமயம் நமது "குமரனி"ல் விளம்பரஞ் செய்துவரும் நண்பர்கள் அறிவார்கள்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு	...	ரூ. உ0—0—0.
அரைப் பக்கத்திற்கு	...	,, கஉ—0—0.
கால் பக்கத்திற்கு	...	,, எ—0—0.
அட்டை இரண்டாம் பக்கத்திற்கு		,, ரு0—0—0.
ஷை மூன்றும் பக்கத்திற்கு		,, ஙரு—0—0.
ஷை நாலாம் பக்கத்திற்கு		,, எரு—0—0.
ஒவ்வொரு விஷயப் பக்கங்களின் கீழ் ஒரு வரி விளம்பரஞ் செய்ய ...		ரூ. கஉரு—0—0.

குறிப்பு:—விளம்பரம் அனுப்புவோர் பங்குனி மீ கருஉக்குள் அனுப்பவேண்டும்.

மானேஜர்,
தனவைசியன் கம்பெனி லிமிடெட், காரைக்குடி.

உள்ளூர்ச் செய்தி.

சென்னை உண்டியல் வட்டம்	0—ஓ—...
இரங்கூன் உண்டியல் வட்டம்	க—ச—0
சென்னை நடப்பு வட்டி மார்கழி	0—கஉ—0
பவுன்	கங—ஈ—0
வெள்ளி ரூபாய் இடை	0—க—...

யூனியன் போர்டு:—கூ—க—உஅல் நடைபெற்ற கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானங்களாவன. திருவாளர்களான லெ பெரியகருப்பனம்பலமும் அ. முக. முத்துக்கருப்பன் செட்டியாரும், மீண்டும் அங்கத்தினர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். கல்லுக்கட்டி ஊரணிக்காவலுக்கும் ஷை கால்வாயில் ஜனங்கள் அசுத்தம் செய்யாமலிருக்கும்படி காப்பதற்கும் ரூ கடு ல் ஒரு சரியான ஆள் ஏற்படுத்தத் தீர்மானம், கையிலிருக்கும் ஒரு தகரக் கக்கூஸ் கொட்டகையுடன் இன்னும் மூன்று சேர்த்து அவற்றை தேவையான சரியான இடங்களில் அமைக்கத் தீர்மானம், யூனியன் எல்லைக்குள் மோட்டார் வண்டிகளுக்குப் போக்குவரத்துச் செய்ய ஏற்பட்டிருக்கும் பாதைகளிலேயே மாட்டு வண்டி குதிரைவண்டிகளும் போக்கு வரத்துச் செய்தல் வேண்டும். கல்லுக்கட்டி ஊரணி மடைக்குழியின் மேல்புறமுள்ள கைபிடி சுவரை உயர்த்தத் தீர்மானம். சுண்ணும்புக்காரத் தெருவின் கீழ்புறமுள்ள கைபிடி சுவரை உயர்த்தத் தீர்மானம். ஆனந்தமடத்திலிருந்து மேல ஊரணி செல்லும் டிஸ்ட்ரிக்ட் போர்டு ரோட்டின் வடபுறமுள்ள கைபிடிசுவரை உயர்த்த ஏற்பாடு செய்யும்படி தீர்மானம். ஊரிலுள்ள எல்லா வீதிகளிலும் இருபுறமும் கான்வெட்ட ... ...யாளும ஒரு மேஸ்திரியும் ஏற்படுத்தி திருவாளர்களான என். எஸ். வெங்கட்டராமய்யர் சி.மு. அரு. முத்துராமன் செட்டியார் ஆகியவர்களின் பொறுப்பின் மேல் நடத்துவதெனத் தீர்மானம். காளியம்மன் கோயில் வீதியில் பறையன் கமவாய்க் கால்வரயின் மேல்புறம் மண் தாங்கிச் சுவர்கட்ட கண்ட்ரிபியூஷன் ரூ கரு0 பெற்றுக் கொண்டுவேலையாரம்பிக்கத்தீர்மானம்.

கூ—க—உஅல் நடைபெற்ற கூட்டத்தில் ககூஉஅ, உகூ-ம் வருஷத்திற்கு ரஸ்தாக்கள் செப்பனிட ரூ க0000 விளக்குக்காக ரூ கங000 பாலம கட்டுவதற்கு ரூ அ000 தண்ணீர் வசதிக்கு ரூ ரு000 செலவு செய்வதென்ற திட்டம் நிறைவேறியது.

சுகாதாரவாரம்:—கஅ-க-உஅல் இவ்வூர் யூனியன் போர்டு கட்டிடத்தில் திருவாளர் என். எஸ். வெங்கட்டராமய்யர் எம். ஏ.; எல். டி. அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அன்னார் பிப்ரவரிமீ முதல் வாரத்தில் நடைபெறவிருக்கும் சுகாதாரவாரக் கொண்டாட்டத்தைப் பற்றிப்பேசினார்கள். பின்னர் திருப்பத்தூர் சுகாதார இலாகா இன்ஸ்பெக்டரும் ஷை விஷயமாய்ப் பேசினார். சுகாதார வாரக் கொண்டாட் ...ற்கு காரிய நிர்வாக சபையொன்... பட்டது. திருவாளர் சி... முத்தாமன் செ... சபைக்குத் தலைவா... நியமிக்கப்பெற்று... பீமசிங் காரியத... வெங்கட்டா... செட்டியார் ... மு. ... நிய...

... இந்த ... வாயக... போர். ... சண்...

விதவா விவாகம்.

சமீபத்தில் சென்னையில் கூடிய ௪0-வது இந்திய ஆசாரச் சீர்திருத்த மகாநாட்டில் விதவா விவாக சம்பந்தமாக நிறைவேறிய தீர்மானத்தைப்பற்றிப் பிரசாரம் செய்யும் பொருட்டு இம்மாதம் ௧௪-ம் தேதி மாலை சென்னை, கோக்கலே மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூடியது. அப்பொழுது டாக்டர் ஸ்ரீமதி. முத்துலெக்ஷ்மி அம்மாள் பேசுகையில் கூறியதாவது:—

"சமீபத்தில் கூடிக்கலைந்த இந்திய ஆசாரச் சீர்திருத்த மகாநாட்டில் விதவா விவாக சம்பந்தமாக நிறைவேறிய தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவரும் பொருட்டே இக்கூட்டம் கூட்டப்பெற்றிருக்கிறது. இதற்குமுன் பன்முறை கூடிய மகாநாடுகளில் விதவா விவாகசம்பந்தமாகப் பல தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளோம். ஆனால் இதுவரை அவை அமுலுக்கு வந்ததாகக் காணோம். ஆயினும் இம்முறை, நிறைவேறியுள்ள தீர்மானத்தைச் செயலில் காட்டும்பொருட்டு பல பெண்கள் தற்போது முன்வந்துள்ளார்கள். நம் நாட்டிலுள்ள விதவைகள் எத்துணை கொடுமைக்குட்படுத்தப்படுகிறார்களென்பதை நாம் உணரவேண்டியதவசியம். விதவைகள் கொடுமை, வங்காளத்திலும் குஜராத்திலும் அதிகமாகவிருக்கிறதெனக் கேள்விப்படுகிறோம். ஆனால் நம் மாகாணத்தில் அத்துணை கொடுமைகள் இல்லையெனினும், தற்போதிருக்கும் கொடுமைகள் உடனே ஒழிய வேண்டியதவசியம். பால்ய விதவைகள் நம நாட்டில் அதிகமாகவிருப்பதற்குப் பெண்களுடைய பெற்றோர்களே காரணம்.

விவாகமென்பது இன்னதென்பதே யறியாதஇளம்பெண்களை பெற்றோர்கள்கட்டாயப்படுத்தி விவாகம் செய்விப்பதனால்தான் பல பாலிய விதவைகளை இன்று நாம் காண்கின்றோம். இக்கொடுமைக்குப் பெற்றோர்கள் ஜவாப்தாரி. பெண்கள் விதவையாகி விட்டால் அது அவர்களுடைய கர்மவினையென்றும், சென்ற ஜென்மத்தில் ஏதோ பாவம் செய்திருக்கவேண்டுமென்றும், அதனாற்றான் அவள் விதவையாகி விட்டாளென்றும், எனவே அவள் ஆயுள் முழுதும் விதவையாகவிருந்து தன் ஊழ்வினையை அனுபவித்தே தீரவேண்டுமென்றும் நம் வைதீகர்கள் கூறுகின்றனர்.

